



# தமிழரசு

1.10.1995 ரூ.3




எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !




திரு முத்துக்கூத்தன்
- பொம்மலாட்டம்

# நிகழ்ச்சிகளில் சில...

கூத்துப்பட்டறைக் குழுவினரின்
- தப்பாட்டம்



# இந்த இதழில்...


ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர்
- மாண்புமிகு முதல்வர்....................................2

திக்கெட்டும் புகழ் மணக்கும்
தெற்காசிய விளையாட்டுப் போட்டி .......3

படமும் - செய்தியும்.......................................... 12

தமிழ்ப்புலவோர் கண்ட சால்பு
- கவிஞர் ஐ. உலகநாதன்...................................13

காட்டுவளம் காக்க வாரீர்!
- புலவர் அ. இராசேந்திரன்.........................17

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்:
- காயிதெமில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா:........................................18

மகாத்மாவும், மகாகவியும்
- டாக்டர் அ. பிச்சை ....................................21

தருமபுரி மாவட்டம்
– பல்துறைப் பணி விளக்க முகாம்............24

பெண் குலத்தின் பொன்விளக்கு
–கவிநிலவு தர்மராஜ்........................................26


நூல்நயம்..........................................................34

'பத்துப்பாட்டு' காட்டுகிற வீர இலக்கணம்
- முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்......36

மானுடம் பாடும் வானம்பாடி
- டாக்டர் ச.சு. இளங்கோ ...............................40

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்
- காயிதெமில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா: ..........................................44

தமிழ் எங்கள் உயிர்
- செல்வி ப. காயத்ரி......................................46


இதழ்தோறும் ஓர் இனிய குறள்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (28)

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும்.


தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
புரட்டாசித் திங்கள் : 15
மலர்: 26 இதழ்: 7
1.10.1995
விலை ரூபாய்: 3



# ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர்!

## –மாண்புமிகு முதல்வர்

'**ம**காத்மா காந்தி' என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலகச் சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர். இந்தியாவைக் 'காந்தி தேசம்' என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக் கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் நமக்குத் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல், சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர் காந்திஜி.

'பிறப்பிலேயே நானொரு ஜனநாயகவாதி' என்று தன்னை அழைத்துக் கொண்ட மகாத்மா காந்திதான், எதற்கும் பயப்படுகிற இந்தியனை வலிமையோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர், வெறும் கோரிக்கை மனுக்களைச் சமர்ப்பித்துச் சுதந்திரம் பெற முடியாது என்பதால், தன்னலமற்ற வழியில், பொது நலச் சேவைக்காக சத்தியாக்கிரகத்தையும், ஒத்துழையாமையையும், நமது சுதந்திரப் போராட்டத்தில் புகுத்தி வெற்றி கண்டவர்.

'சத்தியாக்கிரகம்' என்பது இரண்டு நபர்களுக்குள்ளோ, அல்லது இரண்டு பிரிவினருக்கு இடையேயோ ஏற்படும் முரண்பாடல்ல, அது, உண்மைக்கும் பொய்மைக்கும், நல்லவைகளுக்கும் கெட்டவைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம், என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர் அண்ணல் காந்தி.

சுதந்திர இந்தியாவின் பிரச்சினைகள் எப்படி இருக்கும் என்பதைத் தனது தொலைநோக்குப் பார்வையில் கணித்து, தமது ஒபபற்ற காந்தியக் கொள்கைகளின் மூலம், அவற்றிற்கெல்லாம் வழிமுறைகளையும் வகுத்துச் சொன்னார் அவர். எனவே தான். 'The first and foremost indigenous Social Scientist of India' என்று அழைக்கப்பட்டார்.

அரசியல் சுதந்திரம் மட்டுமின்றி, பொருளாதாரச் சுதந்திரத்தையும் இந்தியா அடைய வேண்டும் என்பதே, அவரது அனைத்து எண்ணங்களிலும் மூலப் பொருளாய் விளங்கியது.

அரசியலில் ஈடுபட்டிருந்த மகாத்மா காந்தி அவர்களின் வாழ்க்கை நெறி, வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெரிய வியப்பைத் தந்தது.

'சத்தியம்' 'உண்மை' என்ற மாபெரும் தத்துவம அவரது எண்ணங்களிலும், செயல்களிலும், மற்றும் அனைத்து வாழ்க்கைக் கூறுகளிலும் பரவியிருந்த பாங்கு அவர் ஏற்றிருந்த பொதுப் பணிகளுக்குத் தீவிரமான வழியமைத்துத் தந்தது. இந்த உலகத்தில் தோன்றிய தலைவர்களில் எவருமே காந்தியடிகளைப் போன்று அரசியல், பொருளாதாரம், சமுதாயம், ஆன்மீகம் என்று தாம் தொட்ட அனைத்துத் துறைகளிலும் இந்தத் தத்துவத்தைப் பின்பற்றவில்லை என்பது, உலக வரலாற்றில் அதிசயிக்கத்தக்க உண்மையாகும்.

**–'புரட்சித் தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து.**

# திக்கெட்டும் புகழ் மணக்கும் தெற்காசிய விளையாட்டுப் போட்டி

## புரட்சித்தலைவியின் வெற்றிச் சரித்திரத்தில் ஒரு பொன்னேடு!

தமிழ்நாட்டின் விளையாட்டுத் தரத்தை, சர்வதேசத் தரத்துக்கு உயர்த்த வேண்டும், தமிழகத்து வீரர்கள் உலகப் போட்டிகளில் வாகை சூட வேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். இவ்வெண்ணத்திற்கு முதல் கட்டமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், ஜூலை 1992-இல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை உருவாக்கினார். இந்த முயற்சியே தமிழ்நாட்டின் விளையாட்டு வளர்ச்சியின் ஒரு திருப்புமுனை எனலாம்.

தமிழ்நாட்டு வீரர்களுக்குத் தக்க தகுதிகள் இருந்தும், போட்டிகளில் வெற்றி பெறாமைக்குக் காரணம் சரியான சர்வதேசத் தரத்தில் விளையாட்டரங்கங்கள் இல்லாமை என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து, தமிழ்நாட்டில் சர்வதேசத் தரத்தில் விளையாட்டரங்கங்களை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டார். அவரது முயற்சியின் முதல் உருவமே, உலகமே வியக்கும் வண்ணம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் ஏழு மாதத்திற்குள்ளாகவே உருவான ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், உள் விளையாட்டரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைத்திடும் சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகப் படுத்தினார்.

## அட்டை சொல்லும் கட்டுரை

சேலம் மற்றும் ஈரோட்டிலுள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்கள், திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தையும், உள் விளையாட்டரங்கத்தையும் பெற்றிருக்கின்றன. சேலத்திலும், ஈரோட்டிலும் நீச்சல் குளங்கள் அமைக்க மொத்த மதிப்பீடான ரூ.27 இலட்சத்திற்கு 1995-96-இல் ரூ.13.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல விளையாட்டு வளாகம் இல்லாத மாவட்டத் தலைநகர்களுக்கும் படிப்படியாக விளையாட்டு வளாகங்கள் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ் 1995-96-இல் சிவகங்கையிலும், திண்டுக்கல்லிலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது 14 மாவட்டங்



களில் விளையாட்டரங்கங்கள், 3 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள், 4 மாவட்டங்களில் விளையாட்டு உள்ளரங்கங்கள் உள்ளன.



விஞ்ஞானிகள், ஆராய்ச்சி யாளர்கள், விற்பன்னர்களைப் போல விளையாட்டு வீரர்களும், தான் பிறந்த நாட்டுக்குப் புகழ் தேடித் தருகிறார்கள். எனவே, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஒரு முறை அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர், வீராங்கனை களைத் தமிழக அரசு தத் தெடுத்து ஊக்குவிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத் தினார்.

## சலுகைகள்

தகுதியிருந்தும், தக்க வசதி யின்றி, ஆர்வமிருந்தும் உற்ற ஆதரவின்றி, வெம்பிப்போன வீரர், வீராங்கனைகளுக்கு ஒரு நம்பிக்கையொளியாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறந்த விளையாட்டு வீரர் களுக்குப் பல்வேறு நிதியுதவி களை வழங்கி வருகிறார். அவற்றுள் சில:

1. இளம் நீச்சல் வீரன் குற்றாலீசுவரனை, தமிழக அரசு தத்தெடுத்துள்ளது. மாதந் தோறும் ரூ.1,000 உதவித் தொகையும், ஆண்டுதோறும் விளையாட்டு உபகரணங்கள் வாங்க ரூ.1,500-ம் வழங்கப் படுகிறது. உலகத்தில் 5 ஜலசந்தி களைக் கடக்க இவ்விளம் வீரனுக்கு ரூ.15.29 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

தடகளப் போட்டி வீராங்கனை செல்வி சோலை மதியை அரசு தத்தெடுத்து அவருக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகையும், ஆண்டு தோறும் விளையாட்டு உப கரணங்கள் வாங்க ரூ.1,500 நிதியுதவியும் அரசு வழங்கி வருகிறது. இது தவிர, மாண்புமிகு முதல்வர் அவர் களின் ஆணையின்படி, செல்வி சோலைமதியின் பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலும் ரூ.2 இலட்சம் நிரந்தர வைப்பு முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வரு வாயைத் தன்னுடைய விளை யாட்டு வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

## நிதியுதவி

மேலும், தடகள வீரர் ஆனந்த நடராஜன் ஸ்வீடன் நாட்டில் சென்று சிறப்புப் பயிற்சி பெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கியுள்ளார். மற்ற வீரர்களும், அவர்களுக்குத் தமிழ்நாடு அரசு வழங்கிய நிதியுதவியும் பின் வருமாறு:

1. செல்வி சாமுண்டீஸ்வரி, பவர்லிப்டிங் வீராங்கனை - ரூ.30,000

2. செல்வன் சோம்நாத் கராத்தே விளையாட்டு வீரர் - ரூ.1.20 இலட்சம்

3. திரு எஸ். கோதண்டன் மற்றும் குழுவினர், கராத்தே - ரூ.3.68 இலட்சம்

4. செல்வன் மணிமாறன். இந்தோனேஷியாவில் நடந்த ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற ரூ.18,500

5. திரு எஸ். ராஜரெத்தினம், கபடிவீரர் - ரூ.1.00 இலட்சம்

6. திரு பி. கணேசன்,

கபடிவீரர் - ரூ.1.00 இலட்சம்

7. திரு கே. பாஸ்கரன், கபடிவீரர் - ரூ.1.00 இலட்சம்

8. திரு எஸ்.ஹுசைனி, கராத்தேவீரர் - ரூ.3.00 இலட்சம்

இப்படி நிதியதவி பெற்ற விளையாட்டு வீரர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

**விளையாட்டு வீரர்களுக்கு வீடுகள்**

ஒலிம்பிக் மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சித் துறையின் அரசாணை எண் 639-இல் குறிப்பிட்டுள்ளபடி, வீடுகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அறிமுகப் படுத்தியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் தங்கப் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர், வீராங்கனைக்கு உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்று அல்லது வீட்டுமனை ஒன்று, வெள்ளிப்பதக்கம் பெற்றவருக்கு மத்திய வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்று, வெண்கலப்பதக்கம் பெற்ற வருக்குக் குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்று அரசு வழங்குகிறது.

இதுவரை மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணை யின்படி, ஹிரோஷிமாவில் நடந்த ஆசியப் போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்ற கபடி வீரர்கள் ராஜரெத்தினம், பாஸ்கரன், கணேசன் ஆகியோருக்கு வீடுகள் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. 1990-ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டியில் பளுதூக்கும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற திரு ரெங்கசாமிக்குக் கொரட்டூரில் வீட்டுமனை வழங்கப் பட்டுள்ளது.

டிரயதலான் வீராங்கனை செல்வி அமுதாவிற்கு உயர் வருவாய்க் குடியிருப்பு ஒன்று பாடியில் வழங்கப்பட்டுள்ளது அவருடைய தந்தைக்கு அரசுப் பணி நிரந்தரம் செய்யப் பட்டுள்ளது.

கராத்தே வீரர் திரு ஹுசைனிக்கு மொகப்பேர் விரிவாக்கத்தில் வீட்டுமனை ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

**தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்**


இப்படி விளையாட்டில் சாதனைகள் படைக்கும் வீரர், வீராங்கனைகளுக்குச் சலு கைகள் செய்வதில் சாதனைகள் படைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்த வேண்டும். இதனால் தமிழக வீரர்களுக்குப் புதிய உற்சாகமும், அவர்களின் பார்வையில் புதிய பரிமாணமும் கிடைப்பதோடு பல சர்வதேசத் தரத்திலான விளையாட்டரங் கங்களில் பயிற்சி பெறும் வாய்ப்பும் கிடைக்கும் என்று விரும்பினார்.

ஏழாவது தெற்காசியப் போட்டிகள் இவ்வாண்டு டிசம்பர் திங்கள் 18-ஆம் நாள் தொடங்கி 10 நாட்களுக்குப் பிரம்மாண்டமாக சென்னையில் நடைபெறவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற் கொண்டுள்ளார்.

**தோழமையின் தூய வடிவம்**

விளையாட்டு வீரத்தின் வெளிப்பாடு, விவேகத்தின் தாய்

**இளம் நீச்சல்வீரன் செல்வன் குற்றாலீஸ்வரன்**





பவர்லிஃப்டிங் வீராங்கனை செல்வி சாமுண்டீஸ்வரி

வீடு, கூட்டு முயற்சியின் தூய வடிவம், நல்லொழுக்கத்தையும், நற்பண்பையும் தனி மனிதனிடத்தில் வளர்த்து, தோழமை உணர்வைத் தூண்டி, மேலாண்மைப் பண்பை மேம்படுத்தி, தனி மனித வளர்ச்சியோடு சமூக வளர்ச்சியையும் காண்பது விளையாட்டுப் போட்டி.

**நன்னம்பிக்கையின் விளைபொருள்**

நாடுகளிடையே வேற்றுமையைக் களைந்து ஒற்றுமையை உருவாக்க முடியும் என்ற நன்னம்பிக்கையின் விளைபொருளே நாடு தழுவிய, உலகளாவிய, வீரங்கொப்பளிக்கும் விளையாட்டுப் போட்டிகள். அவை, உலகம் ஒரு கிராமம். உள்ளோர் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற உன்னதக் கோட்பாட்டின் பயன்படு பொருள்.

**பொறுப்பு மிகுந்த உறுப்பு நாடுகள்**

ஒருமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும், வளர்க் வேண்டும் என்ற இலக்கை எல்லையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது தெற்காசிய நாடுகளின் விளையாட்டு இணையம். இது *1984*-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் உறுப்பு நாடுகள், வங்காள தேசம், பூட்டான், இந்தியா, மாலத் தீவு, நேப்பாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஏழு நாடுகள் ஆகும். இந்நாடுகளுக்கிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விளையாட்டுத் திறமையை வளர்க்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

போட்டி நடைபெற்ற நாடுகள் - ஆண்டு - இடம்:

*1.* நேப்பாளம் - *1984* - காட்மண்டு.

*2.* வங்காளதேசம் - *1985* - டாக்கா.

*3.* இந்தியா - *1987* - கல்கத்தா.

*4.* பாகிஸ்தான் - *1989* - இஸ்லாமாபாத்.

*5.* இலங்கை - *1991* - கொழும்பு.

*6.* வங்காளதேசம் - *1993* - டாக்கா.

வங்காளதேசம் மட்டும் இரண்டு முறை தெற்காசியப் போட்டிகளை நடத்திய பெருமையை ஈட்டியுள்ளது. ஏழாவது தெற்காசியப் போட்டியை சென்னையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்துவதால் இந்தியாவுக்கு இரண்டாவது முறை இப் போட்டியை நடத்திய பெருமை கிடைக்கப் போகிறது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் இப்போட்டிகளைத் தொடங்கி வைக்கப் போகிறார்.

**விளையாட்டுச் சுடர்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் **1993**-ஆம் ஆண்டில் டாக்கா மாநகரில் நடைபெற்ற ஆறாவது தெற்காசியப் போட்டியின் இறுதி நாளன்று தன்னுடைய சார்பாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை அனுப்பி, விளையாட்டுச் சுடரைப் பெற்று, ஏழாவது தெற்காசிய போட்டியைச் சென்னையில் நடத்துவதற்கான ஒப்புதலையும் அளித்து வரச் செய்தார்.

முதல் நிகழ்ச்சியர்க, ஏழாவது தெற்காசிய விளையாட்டுச் சுடரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் **28.10.95** அன்று வரலாற்றுப் புகழ்பெற்ற சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் ஏற்றி வைத்து, சுடரோட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

**அனைத்திந்தியத் தலைநகரிலும் வலம் வரும் சுடர்**

தெற்காசிய விளையாட்டுப்

போட்டிகளின் வரலாற்றில், முதன் முதலாக விளையாட்டுச் சுடர் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலத் தலைநகர் களுக்கும் எடுத்துச் செல்லப் படுகிறது. இது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி த்தலைவி அவர்களின் விருப்பப்படி செயல்படுத்தப் படுகிறது.

இச்சுடரோட்டம், 28.10.95 அன்று சென்னையில் தொடங்கி தொடர்ந்து 25 மாநில - யூனியன் பிரதேசத் தலைநகர்களில் பயணம் செய்து, மீண்டும் 17.12.95 அன்று சென்னை திரும்புகிறது.

**விளையாட்டுக் கிராமம்**

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் இதுவரை கண்டிராத வகையில் முதன் முறையாக நவீன வசதிகள் நிரம்பிய 'விளை யாட்டுக் கிராமம்' மாண்புமிகு புரட்சித்தலைவியின் விருப்பப் படி அமைக்கப்பட்டுள்ளது. ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகள் சென்னை யில் நடத்தப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கும் முதல் ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையத்தின் வாயி லாக 10.7.1993 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் நடை பெற்றது. அன்று முதல் சென்னை மாநகரம் சர்வதேசப் போட்டிகள் நடத்தப்படும் வளமான தளமானது. சர்வ தேசத் தரத்தில் 560 குடி யிருப்புகள் 35 ஏக்கர் நிலப்ப ரப்பில் சென்னை அண்ணா நகர் அருகே கட்டப்பட்டுள்ளன. இவற்றில் 304 குடியிருப்புகள் மூன்று படுக்கையறை வசதியும், 256 குடியிருப்புகள் இரண்டு படுக்கையறை வசதியும் கொண்டவை. மொத்தம் 5 தளங்களில் கட்டப்பட்டுள்ளன. கட்டுமானப் பணிகளைத் தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகம் ரூ.70 கோடி செலவில் கட்டி முடித்துள்ளது. இவ்விளை யாட்டுக் கிராமத்தில் 2,500 விளையாட்டு வீரர், வீராங் கனைகள் தங்கலாம். இங்கு தங்குவோருக்கு 5 நட்சத்திர விடுதியிலிருந்து உணவு வழங் கப்படும். மேலும், இவ்விளை யாட்டுக் கிராமத்தில் வணிக வளாகம், தகவல் மற்றும் ஒலி, ஒளி மையம், வங்கி வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் போன்றவையும் உண்டு.

**போக்குவரத்து வசதிகள்**

விளையாட்டுக் கிராமத் திலிருந்து நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேருந்துகள் சிறப்பாக வண்ணம் பூசப்பட்டு அழகுறக் காட்சி யளிக்கும்.

**விளையாட்டு வீரர்கள்**

ஏழு தெற்காசிய நாடு களிலிருந்தும் 2,200 விளையாட்டு வீரர், வீராங்கனைகளும், ஏறக்குறைய 1,700 விளையாட்டு அலுவலர்களும் கலந்து கொள் கின்றனர்.



| விளையாட்டு | நடைபெறுமிடம் | நடைபெறும் நாட்கள் (டிசம்பர் திங்கள்) |
|---|---|---|
| 1. தடகளப் போட்டிகள் | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம | 20 முதல் 24 முடிய |
| 2. கூடைப்பந்து | டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்து விளையாட்டு உள்ளரங்கம், கீழ்ப்பாக்கம | 22 முதல் 26 முடிய |
| 3. குத்துச்சண்டை | | 19 முதல் 23 முடிய |
| 4. கால்பந்து | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் | 21 முதல் 25 முடிய மற்றும் 27 |
| 5. ஹாக்கி | எம்.ஆர்.சி. விளையாட்டரங்கம் | 21 முதல் 24 முடிய |
| 6. ஜூடோ | கலைவாணர் அரங்கம் | 19 முதல் 21 முடிய |
| 7. கபடி | நேரு பூங்கா விளையாட்டரங்கம | 19 முதல் 22 முடிய |
| 8. துப்பாக்கி சுடும் போட்டி | வீராபுரம் மற்றும் அலமாதி துப்பாக்கி சுடும் பயிற்சிக் களம் | 19 முதல் 21 முடிய |
| 9. நீச்சல் | நீச்சல் குள வளாகம் வேளச்சேரி | 19 முதல் 23 முடிய<br>25 முதல் 26 முடிய |
| 10. டென்னிஸ் | டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் | 19 முதல் 23 முடிய |
| 11. டேபிள் டென்னிஸ் | சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகம | 19 முதல் 23 முடிய |
| 12. பளுதூக்கும் போட்டி | கலைவாணர் அரங்கம் | 22 முதல் 26 முடிய |
| 13. கைப்பந்து | உள்ளரங்கம் | 19 முதல் 23 முடிய<br>25 முதல் 26 முடிய |
| 14. மற்போர் | டாக்டர் ஜெ. ஜெயலலிதா விளையாட்டு உள்ளரங்கம் கீழ்ப்பாக்கம் | 19 முதல் 21 முடிய |

**காட்சி விளையாட்டரங்கங்கள்**

| | | |
|---|---|---|
| 1. கோ கோ | நேரு பூங்கா விளையாட்டு வளாகம் | 23 முதல் 24 முடிய |
| 2. சிலம்பம் | உள்ளரங்கு | 25 முதல் 26 முடிய |
| தொடக்க விழா | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் | 18 |
| நிறைவு விழா | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் | 27 |

## ஊரக விளையாட்டு மையங்கள்

கிராமத்து இளைஞர்களிடையே புதைந்து கிடக்கும் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர, 380 ஒன்றியங்களில் ஊரக விளையாட்டு மையங்கள் ரூ.38 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

### பங்குபெறும் விளையாட்டுகள்

சென்னையில் நடக்கும் இப்போட்டியில்தான், இதுவரை நடந்த போட்டிகளையெல்லாம் விட, அதிகப்பட்சம் 14 விளையாட்டுப் பிரிவுகள் நடக்கவுள்ளன. அவை, டென்னிஸ், நீச்சல், குத்துச்சண்டை, பளு தூக்குதல், ஹாக்கி, கால்பந்து, தடகளப் போட்டி, டேபிள் டென்னிஸ், கபடி, துப்பாக்கிச் சுடும் போட்டி, கைப்பந்து, கூடைப் பந்து, மற்போர், ஜூடோ ஆகும். இந்தியா, இலங்கை, வங்காள தேசம் ஆகிய மூன்று நாடுகளும் அனைத்து விளையாட்டுகளிலும் பங்கு பெறுவதை உறுதிச் செய்துள்ளன. ஜூடோ தவிர பிற விளையாட்டுகள் அனைத்திலும் பாகிஸ்தான் பங்கு பெற விருப்பம் தெரிவித்துள்ளது.

### சிலம்பம்

காட்சி விளையாட்டுகளாக கோகோ மற்றும் தமிழ்நாட்டின் கிராமியச் சிலம்பம் ஏழாவது தெற்காசியப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

விளையாட்டுகள் அனைத்தும் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ள, 11 விளையாட்டரங்களில் நடைபெறும். எந்தெந்த விளையாட்டுகள், எங்கெங்கு நடைபெறும். எந்தத் தேதியில் நடைபெறும் என்பதற்கான முதல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

போட்டிகள் நடைபெறும் 11 வளாகங்களில் 5 விளையாட்டரங்கங்கள் புதிதாகக் கட்டப்படுகின்றன. அவையாவை, நீச்சல் குள வளாகம் - வேளச்சேரி, டென்னிஸ் விளையாட்டரங்கம் - நுங்கம்பாக்கம், ஹாக்கி, விளையாட்டரங்கம் - எழும்பூர், பல்நோக்கு விளையாட்டு உள்ளரங்கம் - பழைய மிருகக் காட்சிசாலை வளாகம் மற்றும் துப்பாக்கி சுடும் தளம், வீராபுரம் மற்றும் அலமாதி.

### நீச்சல்குள வளாகம்

வேளச்சேரியில் முக்கியமான இடத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேசத் தரத்தில் (FINA Standard) புதிய நீச்சல் குள வளாகம் ரூ.11 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. இங்கு 4,500 பேர் அமர்ந்து பார்க்க செயற்கை இழையாலான நாற்காலிகளும், மிக மிக முக்கியப் பிரமுகர்களுக்கான ஓய்வறை, மருத்துவக் குழு அறை போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, நீருக்கடியில் புகைப்படம் எடுக்கும் நவீன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மேலும், நீச்சல் போட்டி நடக்கும் குளம், பயிற்சிக் குளம், உயரேயிருந்து தாவிக் குதிக்கும் பகுதி போன்ற வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

### டென்னிஸ் வளாகம்

நுங்கம்பாக்கத்திலுள்ள மன மகிழ் மன்றம் அமைந்துள்ள பகுதியில் 6 ஏக்கர் பரப்பளவில் டென்னிஸ் விளையாட்டரங்கம் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு உள்ளது. இங்கு 5,000 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் நாற்காலி வசதி மற்றும் தொலைக்காட்சி எடிட்டிங் மற்றும் மிக்சிங் போன்ற சிறப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

### ஹாக்கி விளையாட்டரங்கம்

எழும்பூரில் உள்ள மையப் பகுதியில் 9 ஏக்கர் நிலப்பரப்பில் 5,500 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கக் கூடிய ஹாக்கி விளையாட்டரங்கம் ரூ.8 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வரங்கில் அஸ்ட்ரோ டர்ப் தரை விரிப்பு, சர்வதேசத் தரத்தில் பதிக்கப் பட்டுள்ளது.

### விளையாட்டு உள்ளரங்கம்

ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கின் அருகேயுள்ள

பழைய மிருகக் காட்சிச் சாலைப் பகுதியில் இந்த நவீன விளையாட்டு உள்ளரங்கம் ரூ.25 கோடி செலவில் 10,000 பேர் பார்த்துக் களிக்கும் வகையில் முழுவதும் குளிர்ப்பதனப் படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. இரவைப் பகலாக்கும் நவீன விளக்குகள் மற்றும் தேக்கு மரத்தளமும் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவ் வரங்கில் கூடைப்பந்து, கைப் பந்து, குத்துச்சண்டை, ஜூடோ, பூப்பந்து போன்ற விளை யாட்டுகள் விளையாட வசதிகள் உள்ளன. இங்குப் போதை மருந்து பரிசோதனை அறை மற்றும் மிக முக்கியப் பிரமுகர் ஓய்வறை, தொலைக்காட்சி எடிட்டிங் மற்றும் மிக்சிங் வசதிகள உள்ளன.

### புதிய துப்பாக்கிச் சுடும் தளம்

வீராபுரத்தில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை மைதானத்தில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் புதிய துப்பாக்கிச் சுடும் தளம் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புதிய விளை யாட்டு வளாகங்களைத் தவிர, ஏற்கெனவே சாந்தோமில் உள்ள சர்வதேசத் தரத்தில் அமைந்துள்ள புனித தாமஸ்மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் டேபிள் டென்னிசும், கலைவாணர் அரங்கத்தில் பளு தூக்கும் போட்டியும், ஜூடோ போட்டிகளும், டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப் பந்தாட்ட உள்ளரங்கத்தில் கூடைப்பந்துப் போட்டிகளும், ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தடகளப் போட்டி களும், கால்பந்து போட்டியும் நடைபெறும். மேலும் தொடக்க விழா மற்றும் நிறைவு விழா நிகழ்ச்சிகளும் கலை நயத்தோடு ஜவகர்லால் நேரு விளையாட்ட ரங்கில் நடைபெறும்.

### விளையாட்டு உபகரணங்கள்

சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் ஏறக்குறைய ரூ.4 கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக் கான மொத்தச் செலவு ரூ.200 கோடி அளவில் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

### தொடக்க விழா மற்றும் நிறைவு விழாக் கொண்டாட்டங்கள்

உலகெங்கிலுமுள்ள மக்கள் அனைவரின் கவனமும் சென்னையை நோக்கித் திரும்பும் வண்ணம், கலைநயத்தோடு பலவகையான நடனம் புரிய ஏறக்குறைய 4,000 கலைஞர்கள் சென்னையில் ஒரு மாதக் காலத்திற்குத் தங்கிப் பயிற்சி செய்து தொடக்க விழா மற்றும் நிறைவு விழாக்களில் தங்கள் திறமைகளைக் காட்டவுள்ளனர். இவர்களின் கலை நிகழ்ச்சிகள், காலத்தால் மறக்க முடியாதவை மட்டுமல்ல, உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் சகோதரத்துவம், அமைதி, நல்லெண்ணம் மற்றும் உயர்ந்த உள்ளம் போன்ற குணங்களை வெளிப்படுத்தும், விழாக் கொண்டாட்டங்களுக்கு மத்திய அரசின் ஆலோசகரும், அண்மையில் தில்லியில் நடை பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழா ஏற்பாடு களைச் செய்த மேஜர் ஜெனரல் நரேந்தர் சிங் அவர்கள் தலை மையில் அனைத்து ஏற்பாடு களும் நடைபெறுகின்றன.

### சுடர் ஏந்திய சிங்கக் குட்டி இலச்சினை !

விளையாட்டு வீரர் உடை யில் இன்முகத்தோடு, கையில் சுடரேந்திய, கம்பீரமாகப் பாய்ந்தோடும் சிங்கக் குட்டி ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிக்கான இலச்

## மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

- ★ தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில் முதன்முதலாக 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடையே விளையாட்டுப் போட்டிகள் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.
- ★ நலிவுற்ற நிலையில் வாழ்ந்து வரும் வயதான விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை ரூ.75 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் குறிக்கோளை அடைய அரசு உதவி**

★ பெண்களுக்கான துப்பாக்கி சுடும் போட்டியில் தேசிய அளவில் பங்கேற்று, தங்கப்பதக்கம் வென்ற செல்வி ரூபா உன்னிகிருஷ்ணனுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்து தருவிக்க அரசு ரூ.3.50 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இது தவிர போட்டிகளில் அவர் பங்கேற்கச் செல்லும்போது, அதற்காகும் விமானப் பயணக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

சினையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பிரம்மாண்டமான இந்த மாபெரும் விளையாட்டுப் போட்டியை மிகச் சிறப்பான முறையில் நடத்திடவும், பணிகள் விரைவாக நடைபெறவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். இதற்கென அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள், உயர் அலுவலர்கள் கொண்ட 15 மேல்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. அவை வருமாறு:

1. அமைப்புக் குழு (Organising Committee)

2. வழிப்படுத்தும் குழு (Steering Committee)

3. சுடர்க் குழு (Flame Committee)

4. விளையாட்டுக் கிராமக் குழு (SAF Games Village Committee)

5. விருந்தோம்பல் மற்றும் உறைவிடக் குழு (Hospitality & Accomodation Committee)

6. விழாக் குழு (Ceremonies Committee)

7. கட்டமைப்புக் குழு (Infrastructure Committee)

8. போக்குவரத்துக் குழு (Transport Committee)

9. மருத்துவக் குழு (Medical Committee)

10. தொழில்நுட்பக் குழு (Technical Committee)

11. பாதுகாப்புக் குழு (Security Committee)

12. ஒருங்கிணைப்புக் குழு (Co-ordination Committee)

13. செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சிக் குழு (Media Committee)

14. விளம்பரம் மற்றும் மலர்க் குழு (Publicity Sponsorship and Souvenir Committee)

15. கலை, பண்பாட்டுக் குழு (Art, Cultural and Entertainment Committee)

மேல்மட்டக் குழுக்களோடு, விளையாட்டுப் போட்டியின் முன்னேற்பாடுப் பணிகளைக் கவனிக்க கூடுதலான அரசு அலுவலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமித்துள்ளார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் - செயலாளர் திரு மோகன் பியாரே, இ.ஆ.ப., மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிப் பணிகளைச் சிறப்பாகக் கவனிக்க, தனியாக ஒரு இயக்குநரையும் அவருக்குத் துணையாக நான்கு கூடுதல் இயக்குநர்கள் மற்றும் தனிச் செயலாளராக திரு டி.எல். ஸ்ரீதரன், இ.ஆ.ப., அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமித்துள்ளார்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னைக்கு ஒரு நீங்காச் சிறப்பை வழங்குவதுடன், போட்டிகளை முன்னிட்டு அமைக்கப்படும் விளையாட்டு அரங்குகள் நம் விளையாட்டு வீரர்களின் ஆர்வத்துக்கு உந்து தளமாகவும், தமிழக விளையாட்டு வளர்ச்சியின் ஒரு மறுமலர்ச்சியாகவும், திருப்பு முனையாகவும் அமையும் என்பது மிகையல்ல. இப்போட்டிகள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வெற்றிச் சரித்திரத்தில், சில பொன்னேடுகளை அலங்கரிக்கப் போகின்றன என்றால் அது மிகையல்ல.

**—மா. அசோகன்**

# படமும் செய்தியும்





ஆசியாவிலேயே அதி நவீன 'பாலிபுரப்பலில்' என்ற மேல் நாட்டுப் பொருள் கொண்டு, ஆகாய விமானத்தின் உள் அமைப்பைப் போல் குளிர்சாதனம் பொருத்திய ''டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்'' ஹைடெக் பேருந்தை, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டார். (18.9.95)

தந்தை பெரியார் அவர்களின் 117-வது பிறந்த நாளையொட்டி, அண்ணா மேம்பாலம் அருகில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு நிதிமமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு இரா. சேடபட்டி முத்தையா மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (17.9.95)



தமிழ்ப்புலவோர் கண்ட சால்பு:

# திறம் மிகுந்த புரட்சித்தலைவி தலைமையில் அறம் வளர்ப்போம், ஆற்றல் குவிப்போம்!

**–கவிஞர். ஐ. உலகநாதன்**

**எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "தமிழ்ப் புலவோர் கண்ட சால்புகள்" என்னும் பொருளில் நடைபெற்ற கவியரங்கில் பங்கேற்று கவிஞர் ஐ. உலகநாதன் அவர்கள் 'அறம்' என்னும் தலைப்பில் பாடிய கவிதை.**

இளமைக்குப் பொருளாகி,
இனிமைக்குக் கருவாகி,
பழைமைக்கும், புதுமைக்கும்
பாலமென உருவாகி,
வளமைக்கும் செழுமைக்கும்
பாலாகித் தேனாகி
நலம் பயக்கும் தாயே!
நற்றமிழே எனை அணைப்பாய்!
அணைப்பாரை அணைப்பாய் நீ.
அகல்வானுக்கும் நிழல் தருவாய்.
நினைப்பாரின் நெஞ்சேறி
நினைப் பாட வைப்பாய் நீ!
எனைப்பேணிக் கவியரங்கில்
இனிப்பே நீ வரவேண்டும்!
உனைப் போற்றும் சொல்லுக்கு
உயிர் நீதான் தர வேண்டும்.
தரமுடியா துயர் அனைத்தும்
தமிழ்ப் பகைவர் தந்தாலும்,
வரமுடியா வறுமை என்னை
வட்டமிட்டு வந்தாலும்,
பெறமுடியா உன்அருளைப்
பெற்றுவிட்டால் அதுபோதும்,
மறுநொடியே செத்தாலும்
வாழ்ந்திருப்பேன் எப்போதும்.
மொழிக்கெல்லாம் முதலே, மூச்சுக்கு மூச்சே,
பழிக்கெல்லாம் நான் பொறுப்பு
நல்ல பாட்டுக்கு நீ பொறுப்பு!

தொழுகின்ற கைகளிலே தொடர்கின்ற
காவியம் நீ!
எழுகின்ற மனங்களிலே எழுதுகின்ற
ஓவியம் நீ!
விழுகின்ற அறம் காக்க விரைகின்ற
தெய்வம் நீ!
அழுகின்ற தமிழ் இனத்தை அணைக்கவா
தமிழ்த்தாயே!
வணக்கம்!

**மாநாடு கண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு வாழ்த்து**

அட்சய பாத்திரமே, ஐந்தெழுத்து மந்திரமே!
உச்சரிக்கும் நாவிலெலாம்
உயிர்மணக்கும் சந்தனமே!
நெஞ்சம் மணக்க, நெல்மணக்க,

நீதிநெறி நூல்மணக்க,
தஞ்சை மணக்க, தமிழ்மணக்க,
தரணியே மணக்குதம்மா!
தமிழ்த் தரணியே மணக்குதம்மா!

அட்சய பாத்திரமே, ஐந்தெழுத்து மந்திரமே!
உச்சரிக்கும் நாவிலெலாம்
உயிர்மணக்கும் சந்தனமே!
வில் பறக்க,
வெல்லும் புலி பறக்க,
துள்ளும் மீன் பறக்க,
வான் பறக்கும் வண்ணத் தமிழ்க் கொடியே
உன்னை
வில்லான புருவத்தில்,
மீனான விழிவடிவில்
பொல்லாத பகைமுன்னே புலியாகும்
வீரத்தில்
புரட்சித் தலைவியிடம்
புலவன் நான் காண்கின்றேன்!
வெற்றித் திருமகள் நீ உன்னைப்
பற்றித் தமிழ்தரும்
விந்தைக் கவி தருவேன்.
மனம் முத்திக் கனிந்தவன்
கற்ற புலமையைக் கொட்டிச் சுவை
தருவேன்.
நான்
பட்டத்தரசியின் பாதச்சிலம்புகள் பாடும்
இசை வடிப்பேன்!
நீ
கட்டக் கலந்திடும் கன்னித் தமிழ் மகள்
கார் குழல் பூ முடிப்பாய்!
தக்கத் தமிழ்ச் சுவையை
மிக்கப்
புவிபெறல்
இக்கணம் உன் அருளே!
இக்கட்டுகள் தீர திக்கட்டும் பரவ
நிற்கட்டும் உன் புகழே!
குப்பைத் தொட்டிக் குழந்தைகள்கூட
கும்பிட வைத்தாயே!
அவர் செப்பிடும் பெயர் முன் ஜெ.ஜெ.
எழுத்தும் சேர்த்திட வைத்தாயே!
இனிஷியல்,
பெயர் தெரியாத குழந்தைகளுக்கு
இனிஷியல் ஜெ.ஜெ.!
ஜே.ஜே. என்று வாழ்வார்கள் அவர்கள்,
ஜெ.ஜெ. வாழியவே!
ஜே.ஜே. என்று நாளும் வாழ்த்துவேன்
செந்தமிழ் வாழியவே!

**தொடக்க உரை நிகழ்த்திய மாண்புமிகு அமைச்சர் புலவர் இந்திரகுமாரி அவர்களுக்கு வாழ்த்து**

சமூகநலம் காத்து தமிழ் நலமும் அதில்
சேர்த்து,
அமைவான கைத்தறிபோல்
அழகு தமிழ் சித்திரித்து
அறம்கூடி ஔவைபோல்,
அந்தநாட் பெண் புலவர்
திறம்எல்லாம் காட்டிச்
செவியினிக்க,
சிந்தையெல்லாம் இனிக்க,
கவியரங்கைத் தொடங்கி வைத்த
மரபுவழி வந்த மாண்புமிகு நல்லமைச்சர்,
செந்தமிழ்ப் புலவர் இந்திரகுமாரிக்குச்
செப்பினேன் என் வணக்கம்.
ஒப்பி எனை ஏற்க!

**கவியரங்கத் தலைவர் வணக்கம்.**

பார்வதியாள் மார்பகத்தில்
ஞானப்பால் தீர்ந்ததனால்,
பாரதத் தாய் மார்பகத்தில்
ஞானப்பால் அருந்தியவன் பாரதி!
அவன்
தலைப்பாகை கட்டிக்கொண்டு
தமிழ்ப்பாகை திரட்டியவன்
விலைபோகும் அடிமைகளை விரட்டியவன்.
பாப்பாவைக் கூப்பிட்டுப் பாட்டமுதம்
தரும்போதே
தீப்பாயும் வேகத்தைத் தேகத்தில்
தடவியவன்.

---

எதிர்காலம்

☆ எதிர்காலத்தைப் பற்றி
எண்ணாதே. அது தானாகவே
வரக்கூடியது.

—ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

தமிழ்ப் பசியாற்றவே தன் பசி துறந்தவன்.
பாட்டினையே பசியாறிப் பரிமாறி
வாழ்ந்தவன்!
பட்டினியில் செத்துப் பாட்டாக
வாழ்ந்தவன்!
இவன் தாசன்
சிட்டுக் குருவிகளின் சிறகொடித்துத்
தின்னும்
வல்லூறுகளின் வாயைப் பிளந்து
வாட்டி வறுத்தவன்
இவன்தான் பாரதிதாசன்
மூட்ட வந்த மூடக் கட்டுகளை அறுத்தவன்.
பட்டுத் தமிழ்போல் பச்சைத் தமிழன் நடக்க
சிவப்புக் கம்பளம் விரித்தவன்.
செத்தும் சாகாமல்
செந்தமிழர் நெஞ்சமெல்லாம் பறித்தவன்!
அவனுக்குத் தாசன் சுரதா!
கனக சுப்புரத்தின தாசன்!
இங்கே பாவரங்கத் தலைவர்!
தேன் மழை தந்த வான்புகழ்க் கவிஞன்.
திசைகளை வசமாக்கி உவகை தரும்
உவமைக் கவிஞன்
உண்மைக் கவிஞன்!
திருட்டுக்குத் தேதி தந்து,
இருட்டுக்குச் சேலை தரும்
இளமைக்கு இவன் கவிதை சாட்சி!
கவிதைக்குப் பொருள் தேன்!
காலத்தை வென்று நிற்கும்
இந்தக் கவிமன்னன் சொல்லே
இன்று கவிதைக்கு அரசாட்சி.
தலைமைக் கவிஞரே! உன்னை உன்
சொல்லாலேயே
வாழ்த்தி வணங்குகிறேன்.
"அமுதும் தேனும் எதற்கு? நீ
அருகினில் இருக்கையிலே எனக்கு!"
ஆன்றோரே பெரியோரே!
சுவைஅறிந்து அவையறிந்து
வந்தோரே, தாய்மார்களே!

★ பழைய சட்டையை அணிந்
தாவது புதிய புத்தகத்தை
வாங்கிப் படி!

–பிலிப்ஸ்

உங்கள் அனைவருக்கும் வணக்கம்.
நான் இங்கே அறம் பாட வந்துள்ளேன்
வேரோடும் அறம் எல்லாம்
வெற்றிபெறச் செய்திடுவேன்.
கன்னியர் எழில்பாடி, கருவிழித்
திறம்பாடி,
வெண்ணிலா முகம்பாடி,
வீணை இசைக் குரல்பாடி,
கிண்ணமது இதழ் பாடி,
கிறுகிறுக்கும் நகை பாடி,
மின்னல் இடை பாடி, மேலான நிறம்பாடி,
பின்னல் சடை பாடி, பித்தான
விதம்பாடி,
அன்ன நடை பாடி, அடைந்த சுகம்
ஏதுமில்லை! ஏதுமில்லை!

எழில்பாடி, இடைபாடி, நடை பாடி,
அடைந்த சுகம் ஏதுமில்லை!
இன்றோ,
ஏழை நிலைபாடி, ஏற்றதொரு வழிபாடி,
வாழும் தமிழ் பாடி, வண்ணக் கொடி பாடி,
சூழும் படைபாடி, தூய மறம் பாடி,
ஆளும் வகைபாடி, அறம்பாட
வந்துள்ளேன்.

அறம் எனப்படுவது தர்மம் மட்டுமா?
அதற்கும் மேலே!
எதற்கும் மேலே?
பட்டினியில் தவிப்பார்
பசியறிதல் அறமாகும்.
பசியறிந்து உணவிடுதல்
பாரறிந்த அறமாகும்
வெட்டியாய்த் திரிபவர்க்கு
வேலைதருதல் அறமாகும்
வேலை செய்ய மறுப்பவரை
விலக்குதலும் அறமாகும்
இல்லார்க்கு இருப்பவர்கள்
ஈவதும் ஓர் அறமாகும்
இல்லையென இறவாமை
ஏற்றதொரு அறமாகும்!
கல்லாத பேருக்குக் கல்விதரல் அறமாகும்
கற்றவர்கள் மற்றவர்க்குக்
கைகொடுத்தல் அறமாகும்!
அறம் எனப்படுவது தர்மம் மட்டுமா?

அதற்கும் மேலே!
எதற்கும் மேலே?
தமிழுக்கு நலம் செய்தல்
தக்கதொரு அறமாகும்
தமிழ்ப் பகையை முன்சென்று
தடுப்பதுவும் அறமாகும்
தமிழுக்குத் தலை கொடுத்தல்
சாகாத அறமாகும்
தமிழ் வாழத் தான் தேய்தல்
சத்தியமாய் அறமாகும்!

இல்லறம் என்பது நல்லறம் என்றார்,
துறவறம் என்பதும் தூயது என்றார்!
இல்லறம் என்பது நல்லறம் ஏற்போம்
துறவறம் என்பது தூயதா?
கேள்விதான்!
சந்திசிரிக்கும் சாமியார் துறவறம்.
அந்தோ, சொல்லவோ அடடா கேவலம்!
போதைப் பொருளால்
பொருளைச் சேர்த்தார்
போதை பொருளாய் அவரே மாறினார்.
துறந்தார் என்பவர் இறந்தாரைப் போல்
மறந்தால் மக்கள் மனங்கள் திருந்தலாம்.
துறந்தும் தமிழைத் துறவா இளங்கோ
சிறந்தார், தமிழைச் சிறக்கச் செய்தார்.
சிலப்பதிகாரம் செய்தார் தமிழில்,
சிறப்பு அதிகாரம் செய்து வாழ்கிறார்.
இத்தகு துறவு இலட்சியத் துறவு
இவரைப் போன்றோர் எவருக்கும் உறவு.

நல்லறம் பூண்டார் நற்றமிழ் மொழிக்கு
வில்லும் மரங்களின் விளக்கைத் தந்தார்.
ஈகை செய்வார், வாகை பெறலாம்
சாகா உண்மை, சரித்திரம் இதுதான்!
ஆனால்,
தோகை மயிலுக்குப் போர்வை தருவதும்
சோகை முல்லைக்குத் தேரைத் தருவதும்
சரிதானா? இதைச் சரி செய்ய வேண்டும்!
கொடை மடம் என்னும் குறையைப் போக்கி
அனைவரும் நலம் தரும் அறங்கள்
செய்வோம்.

முல்லைக்குத் தேர் கொடாதீர். மக்கள்
தொல்லைக்குத் தோள் கொடுப்போம்.
மயிலுக்குப் போர்வை வேண்டாம்.
வெய்யிலுக்குக் குடை கொடுப்போம்.

அறம் செய்யக் காரணம் அன்புதான்.
அதுபோல மறம் புரியவும்
ஈரமுள்ள மனமேதான் காரணம்!
தாய் அன்பால் பழித்தவனின்
தலைபறித்தல் அன்புதான்.
தமிழன்பால், பழித்தவனின் தலையிலே
கல்லேற்றி, தூய அன்பை உணர்த்திய...
சுடரும் வரலாறு சொல்லவா வேண்டும்?
எல்லோருக்கும் புரியும்!
'அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'
—இது வள்ளுவம்.
ஊரிலே நாட்டிலே
கொல்லாமை ஓர் அறம்.
போரிலே களத்திலே
கொல்வதே அறமாகும்.
பொய்யாமை ஓர் அறம். ஆனால்,
பொல்லாங்கு தீமைகளைப்
போக்குமானால்,
பொய்யும் அப்போது புனிதமான
அறமாகும்.
அறம் எனப்படுவது தர்மம்தானா?
அதற்கும் மேலே!
எதற்கும் மேலே?
இதற்கும் மேலே வளர்ப்பது விடுத்து,
இனிய அறம் இனி வளர்க்கவென்று
தடைகளை உடைத்துத் தமிழ் அறம் வாழ
தமிழ்த் தாயிடம் நான் விடைபெறுகின்றேன்
வாழிய தமிழ் அறம், வாழிய செந்தமிழ்! ●

---

**அடிமைத்தனம்**


★ **தான் வாழ்வதற்காக மற்றவர்களை உழைக்கச் செய்து விட்டு, தான் மட்டும் உழைக்காமல் வாழ முடியும், என்கிற நிலை படைத்த மனிதன் எங்கே இருக்கிறானோ அங்கே அடிமைத் தனம் நிச்சயமாக இருக்கும்.**

**—டால்ஸ்டாய்**

# காட்டுவளம் காக்க வாரீர்!

## (எண்சீர் ஆசிரிய விருத்தம்)

புலவர் அ. இராசேந்திரன்




நாட்டுக்கு நல்லழகை ஊட்டும் காடு!
நாமெல்லாம் நடமாடும் இன்ப வீடு!
பாட்டுக்குள் காட்டுவளம் கண்ட தெல்லாம்
பழம்பெருமை எனச்சொல்லி ஒதுக்க வேண்டாம்!
வீட்டுக்கோர் மரம்வளர்ப்போம் என்று சொல்லி
விளம்பரத்தால் நமக்கெல்லாம் புகட்டும் பாடம்
காட்டுக்கு வந்தபெரும் சோகம் என்றால்
சோதனையும் வேதனையும் போவ தெந்நாள்?

மனிதனுக்கு மரங்கொடுக்கும் பயன்கள் கோடி!
மரத்திற்கோ இவனிழைக்கும் துயர்பல் கோடி!
கனிதந்து, காய்தந்து, கட்டை தந்து,
கட்டிலுடன் தொட்டில்சேர் மரச்சா மான்கள்,
அணிதந்து, பிணிதீர்த்தே அரிய தொன்றாம்
அரியணையும் அரசர்களுக் குவந்த ளிக்கும்
இனியதொரு காட்டழகை வெட்டிச் சாய்க்க
இதயமுள்ள மனிதர்கள் விரும்பு வாரோ?

பயன்மரங்கள் உள்ளூரில் பழுத்த மாண்பும்!
பலநோய்கள் தீர்த்துதவும் மரத்தின் நோன்பும்!
நயனுடையார் ஈகையினைச் சுட்டிக் காட்ட
நற்புலவர் வள்ளுவனார் நவின்ற தெல்லாம்
பயனற்றுப் பழங்கதையாய்ப் போக லாமா?
பழுதுள்ள காற்றினைத்தான் சுவாசம் செய்து
துயர்போக்கும் உயிர்க்காற்றை நமக்குத் தந்த
தூயமனத் தோழனையே அழிக்க லாமா?

தேக்குமரக் கூட்டங்கள் செழித்து வாழ
தேடரிய சந்தனத்தின் மரமும் ஓங்க
நூக்குநுணா, வேங்கையுடன், கோங்கும் வாழ
நீண்டுவளர் தென்னையுடன், பனையும் வாழ;
பாக்குமரம், பவழமல்லி, மருதும், ஆங்கே
பலாசமுடன் செடிகொடிகள் அடர்ந்து காண
நோக்குமிடம் எல்லாமும் காடாய் மாற
நல்லதொரு திட்டத்தை வகுப்போம் வாரீர்!





# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் காயிதேமில்லத் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இளையான்குடியில் தமிழக அரசின் சார்பில், காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 24.9.95 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை ஏற்றார். காயிதேமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் சிறப்புரை யாற்றினார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் காயிதேமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ப. சிவக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை யாற்றினார். இளையான்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மா.சா.மா. இராமச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

தலைமையுரையில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும்போது கூறிய தாவது:

''அடித்தள மக்களின் வாழ்வுக்காகப் பாடுபடுவது இந்த அரசு. மனித நேயத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அரசின் சார்பில் விழா எடுத்து நகரின் முக்கிய இடத்தில் சிலைகளை அமைத்து அவர்களின் புகழ் பரப்புவது இந்த ஆட்சியில்தான்.

''காயிதேமில்லத்துக்குக் கண்ணியத்தென்றல் என்ற பட்டத்தைத் தந்து அவரைச் சிறப்பித்தது புரட்சித்தலைவி ஆட்சியில்தான். காயிதேமில்லத் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவரானாலும் அன்னவருக்காகவும் பாடுபட்டவர். மனித நேயத்துக்காகப் பாடுபட்ட அவரது பிறந்தநாள் விழாவை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசு, தமிழ்நாடு முழுவதும் ஒரு ஆண்டு கொண்டாடுகிறது'' என்று கூறினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் காயிதேமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசும்போது, "பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் ஆட்சிமுறைகளைப் பின்பற்றி





மூன்றாவது தலைமுறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சி செய்கிறார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சியின்போது முஸ்லீம் மதூதிகள் சீரமைக்க நிதி உதவி செய்தார். புரட்சித் தலைவியின் ஆட்சியில், வக்ஃப் போர்டு வறுமையில் வாடிய போது ஒரு கோடி ரூபாய் வழங்கி உதவி செய்தார். இவர்களுக்கு முன் ஆட்சியில் இருந்த முதல் அமைச்சர்கள் யாரும் எங்களுக்கு இவ்வாறு உதவிகள் செய்ததில்லை. புரட்சித்தலைவி ஆட்சியில்தான் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவருக்கு அமைச்சர் பதவி, மேலவை உறுப்பினர் பதவி, எம்.எல்.ஏ பதவிகள் கிடைத்தன. எனவே, எங்கள் சமுதாயத்துக்கு உதவிகள் செய்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். எனவே தான், இந்த அரசை எங்கள் சமுதாயம் ஆதரிக்கிறது" என்று கூறினார்.

காயிதேமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசும் போது "மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் சாதி, மதம் பார்க்காமல் அனைவரின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திவருகிறார். நாட்டுக்கு உழைத்தவர்களின் பெயரில் மாவட்டங்கள் அமைத்தும், அவர்களின் தியாகங்களைப் பின்னால்வரும் சந்ததியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சிலைகள் அமைத்தும், அவர்களைச்சிறப்பித்து வருகிறது எங்கள் புரட்சித்தலைவி அரசு என்று கூறக் கடமைப் பட்டுள்ளேன். மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர்கள் 2 பேர். ஒருவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். இரண்டாமவர் காயிதேமில்லத். இவர்கள் மக்களிடையே வாக்குக் கேட்காமலேயே தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்.


"இளையான்குடிப் பகுதியில் மின் பற்றாக்குறையைப் போக்க, இளையான்குடியில் ரூ.3 கோடித் திட்டத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும். மேலும், குடிநீர்ப் பற்றாக் குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார். செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு) திரு இரெ. மருதமுத்து அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில், தமிழ்நாடு வக்ஃப் போர்டு வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், அனைத்திந்தியப் பொதுச் செயலாளர்—இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு அப்துல்சமது, சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத்சர்புதீன், நாடாளு மன்ற உறுப்பினர் திரு மஸ்தான், சிவகங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கரு. முருகானந்தம், காரைக்குடித் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திருமதி கற்பகம் இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்

# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

**ஆணையர்**, சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : **584440.**

**மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்**, சென்னை – 600 002. தொலைபேசி : **849962.**

**மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,**

**வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள்** மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,**

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.


சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95



# மகாத்மாவும் மகாகவியும்



–டாக்டர் அ.பிச்சை, காந்திகிராமம்

இந்தியாவில் சுதந்திரக் காற்றைச் சுவாசம் செய்ய வைத்தவர்கள் மகாத்மாவும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் ஆவர். திலகரின் சீடரான பாரதியாரும் கோகலேயின் சீடரான மகாத்மா காந்தியடிகளும்தான் அன்னை பாரதத்தின் விடுதலைக்கும் சமூகப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் அயராது உழைத்தவர்கள்.

**விடுதலை வேள்வி**

பாரதமாதாவின் அடிமை விலங்கை உடைத்தெறிவதே இருவரது பொது நோக்கமாக இருந்தது. இருவரும் சில இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளில் (காசி 1905, சூரத் 1907) கலந்து கொண்டு கட்டுக்கடங்காச் சுதந்திரத் தாகம் பெற்றனர். ஆனால், அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தது கிடையாது. சூரத் கூட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாதிகள், தீவிர வாதிகள் எனப் பிரிந்தது.

மிதவாதப் போக்கைக் கொண்ட கோகலே அணியில் மகாத்மா சேர்ந்தார். தீவிரவாதப் போக்கைத் தழுவிய திலகர் அணியில் பாரதியார் இருந்தார். திலகரின் வேகமான அரசியல் மற்றும் சமூக விடுதலைக் கொள்கைகளைத் தம் கவிதைகள், கட்டுரைகள் வாயிலாகப் பாரதியார் பிரச்சாரம் செய்தார். திலகரின் மரணத்திற்குப் பின்பு மிதவாதிகளின் செல்வாக்கு அதிகரிக்கின்றது. இக் கால கட்டத்தில் மகாத்மா தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்து இந்தியாவில் நிரந்தரமாகத் தங்கி இந்திய தேசியக் காங்கிரஸிற்கு வழி காட்டுகின்றார். இவரது தலைமையை ஏற்றுப்போற்றி "வாழ்க நீ எம்மான்" என்று மகாத்மா காந்தி பஞ்சகம் இயற்றுகின்றார்.

ஆகவே, சுதந்திர வேள்விக்கு மேடையிட்டு அக்னிக்குஞ்சை வளர்த்துக் கொடுத்தவர் பாரதியார். சுதந்திர அக்னி நன்கு வளர அகிம்சை என்னும் நெய்யூற்றி சத்தியாக்கிரகம் என்னும் விறகிட்டு அணையாமல் காத்து வேள்வியின் பயனை நுகரச் செய்தவர் மகாத்மா.

**இரு துருவங்களின் சந்திப்பு**

மகாகவி பாரதியார், மகாத்மாவைப் பற்றி 1909–ஆம் ஆண்டிலேயே அறிந்துள்ளார் என்பதற்கு அவர் "இந்தியா" என்னும் இதழில் வெளியிட்ட கருத்துப்படம் (18-12-1909) சான்றாக உள்ளது. "ஸ்ரீகாந்தியென்ற பசுவானது தனது கன்றுக்குட்டியாகிய இதர இந்தியர்களின் நன்மையின் பொருட்டு இங்கிலாந்துக்குப் போய்ப் பேசிவிட்டு சிறையிலடைபடுவதற்கு மறுபடியும் திரான்ஸ்வாலுக்கு வந்திருக்கின்றது. தென்ஆப்பிரிக்கா உத்தியோகஸ்தர்களாகிய புலிகள் இவருடைய மேன்மையை அறியாமல் சிறையிலடைத்தார்கள்'' என்று பாரதியார் இந்தியா பத்திரிகையில் எழுதியுள்ளார். சித்திர விளக்கத்தில்– "இப்பசுவைப் போல நடந்து கொண்ட நம்து ஸ்ரீகாந்தி பிரபுவை தென் ஆப்பிரிக்கா புலிகள் என்ன செய்கின்றன பார்த்தீர்களா?" என்று வினவுகின்றார். இதிலிருந்து மகாத்மாவைப் பற்றி (தென் ஆப்பிரிக்காவில் இருக்கும்பொழுதே) பாரதியார் அறிந்துள்ளார் என்றும், அவருடைய அகிம்சைக்

கொள்கையை அறிந்துள்ள தோடு மட்டுமின்றி, அவர் மீது மரியாதையும் வைத்திருந்தார் என்றும் உய்த்துணரலாம்.

### காந்தியார் சந்திப்பு

மகாகவியும் மகாத்மாவும் 'நேருக்கு நேர்' சந்திப்பது 1919-ஆம் ஆண்டு மார்ச்சில் தான். மகாத்மா ரவுலட் சட்ட எதிர்ப்பு விஷயமாக இந்திய நாட்டுத் தலைவர்களைச் சந்திக்க சென்னை வந்த பொழுது இராஜாஜியின் விருந்தினராக இருந்த பொழுது, பாரதியார் மகாத்மாவைச் சந்தித்தார். பாரதியார் மகாத்மாவிடம் தான் இன்று பேசும் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வரமுடியுமா என்று கேட்க, மகாத்மா இன்று வேறொரு அலுவல் இருப்பதால் நாளை ஒத்திப்போட முடியுமா என்று வினவ, 'இயலாது' என்று பதிலிறுத்து விட்டு மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்திற்கு வாழ்த்துச் சொல்லிவிட்டு உடனே சென்று விடுகின்றார்.

பின்பு, மகாத்மா 'இவர் யாரென்று' இராஜாஜியிடம் வினவ, அவர் தமிழ்நாட்டுத் தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார்' என்று கூறினார் மகாத்மா 'பாரதியாரை' நன்கு பாதுகாக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளார். இச்சந்திக்குப்பின்பு தான் 'வாழ்க நீ எம்மான்' என்ற பாடலைப் பாரதியார் பாடியிருக்க வேண்டும்.

மகாத்மாவும் மகாகவியும் சில அணுகுமுறைகளில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் இரு துருவங்களாகக் காட்சியளித்தாலும் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளில் ஒன்றுபடுகின்றனர்.

### பத்திரிகையாளர்கள்

மக்களாட்சி என்னும் மாளிகையின் நான்காவது தூண் பத்திரிகை என்பர். இந்தியாவில் இதழியல் இனிது வளர முன்னோடிகளாகச் செயல்பட்டவர்களான மகாத்மாவும் மகாகவியும் தமது கருத்துக்கான உச்சி மீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்சமின்றித் துணிவோடு எழுதி வெளியிட்டார்கள்.

பாரதியார் 1904-இல் சென்னைக்கு வந்து 'சுதேசமித்திரன்' என்னும் இதழுக்கு உதவியாசிரியராகச் சேர்ந்தார். பின்பு 'சக்ரவர்த்தினி' என்னும் மாதப் பத்திரிகையின் பொறுப்பாசிரியராகச் செயல்பட்டார். 1908-1910-ஆண்டு கால கட்டத்தில் இவர் 'இந்தியா' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து வெளியிட்டார். இதில் தரமான கட்டுரைகளையும் கருத்துப்படங்களையும் வெளியிட்டுப் புரட்சி செய்தார். மேலும், விஜய (தினசரி), சூர்யோதயம் (வார இதழ்) பால பாரதா (ஆங்கில வார இதழ்), கர்மயோகி (மாத இதழ்) போன்றவைகள் ஆரம்பிக்கப்பட்டு நின்று போயின. 'சித்ராவளி' என்னும் ஆங்கில-தமிழ் கருத்துப் படப் பத்திரிகைத் திட்டமும் நிறைவேறவில்லை. இவையாவும் பாரதியாரின் பத்திரிகைத் துறையில் உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டையும் சிறந்த பத்திரிகையாளர் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

மகாத்மா தென்னப்பிரிக்காவில் வாழ்ந்தபொழுது 'இந்தியன் ஒப்பினியன்' என்னும் இதழைத் தொடங்கித் தனது 'சுயராஜ்ய' சிந்தனைகளை வெளியிட்டு வந்தார். இந்தியா வந்து நிரந்தரமாகத் தங்கிய பின்பு 'யங்இந்தியா' (1919), 'ஹரிஜன்' (1933) போன்ற இதழ்களைத் தொடங்கி நடத்தினார். அரசியல், சமூகம், சமயம், தேசீயம், மருத்துவம், தொழில் பற்றிய பல செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். அவை இன்று 100-க்கு மேற்பட்ட தொகுதிகளாக (Collected Works of Mahatma Gandhi) வெளிவந்துள்ளன. பாரதியாரின் 'வந்தே மாதரம் என்போம்' 'ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே' 'பகைவனுக்கருள்வாய்' என்னும் பாடல்களை இராஜாஜி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக்க, மகாத்மா 1928-இல் தமது 'யங் இந்தியா' பத்திரிகையில் வெளியிட்டார். எனவே, இருவரும் பொறுப்பு மிக்க பத்திரிகையாளராக விளங்கி, கருத்துச் சுதந்திரம் வளர வழி காட்டியவர்கள்.

### சமுதாயச் சீர்திருத்தவாதிகள்

இருவரும் இந்திய விடுதலை

---

★ **தண்டனை என்பது நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன் படுவது. ஆனால், சில சமயங்களில் தீ வளர்க்கும் நெய்யாக மாறிவிடுகிறது.**

**–பிளாஷ்**

---

மட்டும் போதாது என்று திடமாக-தீர்க்கமாக எண்ணினார்கள். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தோடு சமூகச் சீர்திருத்த எண்ணங்களையும் இந்திய மண்ணில் தூவி வளர்த்தனர். பண்பாட்டுப் புரட்சிகளும் சமூக மாறுதல்களும் இந்திய விடுதலையோடு சேர்ந்து நிகழும்படி செய்தனர். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்கும் அறியும் ஆற்றலும் ஆளுமையும் தேவை என்று நன்குணர்ந்தனர்.

இந்தியா அரசியல் அதிகாரத்தில் ஆங்கில ஏகாதிபத்யத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்ததைப் போலவே, இந்திய மக்களும் சாதி, சமயம், பாலினம் போன்ற பிரிவினைகளுக்கு அடிமைப்பட்டும் மூடநம்பிக்கையில் அமிழ்ந்தும் போயிருந்தனர். மகாத்மாவும் மகாகவியும் சமூகம், சமயம், கல்வி, பொருளாதாரம், மருத்துவம், கலைகள் போன்ற பல நிலைகளிலும் விழிப்புணர்ச்சி ஊட்ட முனைந்தனர். விதவை மறுமணத்தைப் பற்றிக் கூறுகையில் மகாத்மாவின் கருத்தின் ஒரு பகுதியை ஆதரித்தும் இன்னொரு பகுதியையும் எதிர்த்தும் விதவை மறுமணத்தை வலியுறுத்தி அழுத்தமாகப் பாரதியார் விவாதித்துள்ளார்.

மகாத்மாவின் மகத்தான சிந்தனைகளையும் மகாகவியின் மானுடவளர்ச்சிக்கான கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்வதற்கு நிறைய வாய்ப்பிருக்கின்றது. இருவரின் சிந்தனைகள் ஒன்றுபட்டுக் குவிகின்ற இடங்கள் பல. பொதுமக்கள் இலக்கியம், தாய்மொழிக்கல்வியின் சிறப்பு, மதச்சார்பின்மை, மூடநம்பிக்கை மற்றும் தீண்டாமை ஒழிப்பு, ஏழைகளுக்குச் செல்வந்தர்கள் செல்வத்தைப் பகிர்ந்தளித்தல், பொதுவாழ்வில் ஒழுக்கம், தனி வாழ்க்கையில் வாய்மை போன்றவற்றுள் இருவருக்கும் நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டியது அறிஞர்களின் கடமையாகும்.


தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



# தருமபுரி மாவட்டத்தில்




**அ**ரசின் திட்டங்கள், ஆக்கப் பணிகள் ஆகியவற்றைப் பல் வேறு விளம்பரச் சாதனங்கள் மூலம் விளக்கி மக்களை விழிப் படையச் செய்வதுதான், பல் துறைப் பணி விளக்க முகாம் களின் நோக்கமாகும்.

தருமபுரி மாவட்டத்தில் பல் துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி **29.9.95** அன்று தொடங்கியது. பல் துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியினை, மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமை யேற்று, பல்துறைப் பணி விளக்க முகாமினைத் தொடங்கி வைத்தார்.

கண்காட்சியைத் தொடங்கி வைத்துப் பேசிய மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், வீட்டு வசதித்துறை மூலம் தமிழ்நாடு அரசு தருமபுரி மாவட்டத்திற்குச் செய்துள்ள சாதனைகளை விளக்கிக் கூறினார்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள், தமது தலைமை உரையில், அரசு செயல்படுத்தி



வரும் திட்டங்களை மக்கள் புரிந்துகொள்ளும் வகையிலும், அத்தகையத் திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வழி முறைகளைத் தெரிந்துகொண்டு அதற்கான முயற்சிகளைக் கையாளும் வகையிலும் முகாம் நடத்தப்படுகிறது என்று கூறி னார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னதாகத் தமது விளக்க உரையில், நடப்பு நிதியாண்டில் 10 மாவட்டங்களில் இத்தகைய முகாம்களை நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கு ஏற்ப, இதுவரை மூன்று மாவட்டங்களில் நடத்தப் பட்டு, நான்காவதாக தருமபுரி மாவட்டத்தில் சிறப்பாக நடத்தப் பட்டு வருகிறது என்றும், மேலும் ஆறு மாவட்டங்களில் இம் முகாம் தொடர்ந்து நடத்தப்படும் என்றும், பொதுமக்கள் இம் முகாமின் பயன்களை முழு வதும் அடைய நன்முறையில் பங்குபெற வேண்டும் என்றும் கூறினார்.

தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு ரகுபதி அவர்கள வரவேற்புரை நிகழ்த்தினார். துணை இயக்குநர் திரு மா. விஸ்வநாதன் அவர்கள் நன்றி கூறினார். விழா முடிவில் திரைப்பட நடிகர் டைப்பிஸ்ட் கோபு குழுவினரின் 'நல்லதே நடக்கும்' எனும் சாதனை விளக்க நாடகம் நடைபெற்றது. விழா தொடங்கு வதற்கு முன் அன்னை சத்யா போக்குவரத்துக் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடை பெற்றது. விழாவில் ஆயிரக் கணக்கான மக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பல்துறைப் பணி விளக்க முகாமினை ஒட்டி தருமபுரி மாவட்ட விளையாட்டு அரங்கில் கண்காட்சி ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. இக்கண்காட்சியில் தமிழக அரசின் பல்வேறு துறைகள் பங்குபெற்றன.

23 அரங்குகள் தங்கள் துறையின் சாதனைகளை விளக் கும் வகையில் அமைந்திருந்தன. 29.9.95 முதல் 5.10.95 வரை ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க் கண்டவாறு தினசரி காலை 10.00 முதல் மாலை 3.00 மணிவரை பல்வேறு துறை பங்குபெற்ற விளம்பர முகாம்கள் நடை பெற்றன.

இம்முகாமில் இலவச மருத்து வப் பரிசோதனை, கால்நடை களுக்கு இலவசச் சோதனை, சமூகநலத்துறை மூலம் பெண் களுக்கான திட்டங்கள், வேளாண் மைத்துறையின் மூலம் இலவச விதைகள், பூச்சி மருந்துகள், வனத்துறை மூலம் இலவச மரக்கன்றுகள், ஊரக வளர்ச் சித்துறை, வருவாய்த்துறை, பிற்பட்டோர் நலத்துறை, ஆதி திராவிடர் நலத்துறை மூலம் இலவச உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

இவைதவிர, மாவட்டத்தி லுள்ள 18 ஊராட்சி ஒன்றியங் களில் தளி ஒன்றியம் தவிர 17 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நாளொன்றுக்கு மூன்று படக் காட்சிகளும், பர்கூர் ஒன்றியப் பகுதிகளில் 6 படக்காட்சிகளும் ஆக மொத்தம் 29.9.95 முதல் 5.10.95 வரை 378 படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

இதுதவிர, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனையை விளக்கும் வகையில், முகாம் நடைபெறும் 7 நாட்களுக்கும் ஊராட்சி ஒன் றியப் பகுதிகளில் 40 இடங்களில் நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முகாம் இறுதி நாளான 5.10.95 அன்று கண்காட்சியில் பங்கு பெற்ற சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**அரசுச் சார்பு நிறுவனங்கள் அரங்கம்:**

முதல் பரிசு - தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்.

2-வது பரிசு - அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்.

3-வது பரிசு - அறிவொளி இயக்கம்.

**அரசுத்துறை அரங்கம்:**

முதல் பரிசு - வேளாண்மைத் துறை.

2-வது பரிசு - ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்துறை.

3-வது பரிசு - பட்டுவளர்ச்சித் துறை.

# பெண் குலத்தின் பொன்விளக்கு
# தமிழ் மாநிலத்தைக் காக்க வந்த மணிவிளக்கு

## திருமதி கவிநிலவு தர்மராஜ்

**கடந்த ஜனவரித் திங்களில், தஞ்சை மாநகரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் 'பெண்ணின் பெருமை' என்னும் தலைப்பில் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கு நிகழ்ச்சியில் பங்கேற்று, சட்டமன்ற உறுப்பினர் கவிநிலவு தர்மராஜ், 'சமூகம்' என்னும் பொருளில் ஆற்றிய உரை:**

சமூகம் என்ற சொல், மனிதர்களைப் பொறுத்தவரை, உயர்ந்த எண்ணங்களைப் பொறுத்தவரை உபயோகிக்கக் கூடிய அருமையான சொல். தமிழ் என்று சொன்னாலே அதிலே சீரும் இருக்கிறது சிறப்பும் இருக்கிறது. ஆனால் அதைக் கையாளும்போது கவனமும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அருமையான சொல், தமிழிலே இருக்கக் கூடிய சமூகம் என்ற சொல்.

**சமூகம், சுமூகம் ஆக்கப்பட வேண்டும்**

அன்று காட்டிலேயும் மேட்டிலேயும் தனித்து வாழ்ந்து கொண்டிருந்த மனிதன், தன்னுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும், கனவுகளையும், நனவுகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று எண்ணியபோதுதான், அவனுடைய எண்ணங்கள் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்று நினைத்த போதுதான் மொழி உருவாயிற்று. அந்த மொழியை அவன் மொழிய ஆரம்பித்தபோது, மக்கள் ஒருவரை ஒருவர் சாரச் சார சேரச் சேர, அது சமூகம் ஆனது. அந்தச் சமூகம், சுமூகம் ஆக்கப் பட வேண்டும். அந்தச் சமூகத் திலே பலவகை இருக்கிறது. ஆண்களும் பெண்களும் சேர்ந்ததொரு சமூகத்தை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் சமூகத்திலே மட்டும் ஆண்கள் சமூகம், பெண்கள் சமூகம், படித்தவர் சமூகம், படிக்காதவர் சமூகம், ஏழை சமூகம், பணக்கார சமூகம், ஆளுகின்ற சமூகம், ஆளுகைக்கு உட்பட்ட சமூகம், அதோடு மட்டுமல்லாமல், ஆதிக்க சமூகம், அடிமை சமூகம் என்று பல்வேறு வகையிலே கவிஞர்கள், அறிஞர்கள் பகுத்துத் தொகுத்துப் பிரித்து ஆய்வு செய்திருக்கிறார்கள். விலங்குகளைப் பொறுத்தவரை சமூகம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதில்லை. மனித, உயர்நிலை மக்களுக்கு மட்டுமே இந்த அருமையான பொருள் பயன்படுத்தப்படுகிறது.

**சொல்லுவதோ சக்தி என்று!**
**தள்ளுவதோ சகதி நிலைக்கு!!**

இந்தச் சமூகம் ஆதாரமாகக் கொண்டிருப்பது யாரை? அச்சாணியாக, ஆணிவேராகக் கொண்டிருப்பது பெண்ணை. இந்தப் பெண்ணை வைத்துத் தான் இந்த சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் தொகுதியிலே, மக்கள் தொகையைக் கணக்கெடுப்போமேயானால் பெண்கள் பாதிக்கு மேலாக இருக்கிறார்கள். இப்படி ஆணி வேராக, அச்சாணியாக, அடிப்படையாக இருந்து கொண்டிருக்கிற பெண்களுடைய நிலைமை, இடைக்காலத் திலே எப்படி இருந்தது? அந்தக் காலத்திலே நாம் பல இலக் கியங்களைப் படித்தோம். புத்த கங்களைப் படித்தால் படிப்புக் குத் தலைவி பெண், பக்திக்குத் தலைவி பெண், நாட்டுக்குத் தலைவி, நடிப்புக்குத் தலைவி, வீட்டுக்குத் தலைவி, விவேகத் திற்குத் தலைவி, பொறுமைக்குத் தலைவி, பூமிக்குத் தலைவி என்று இப்படி அனைத்துக்கும் தலைவி பெண் என்று சொல்லி, நதிக்கும் தலைவியைப் பெண்ணாக வைத்து, கலை மகள், மலைமகள், அலைமகள் என்றும், அன்னலட்சுமி, தானிய

லட்சுமி, அஷ்ட லட்சுமி, வீரலட்சுமி, ஜெயலட்சுமி, கஜலட்சுமி, ஆதிலட்சுமி, சந்தான லட்சுமி, தைரிய லட்சுமி என்றும் வைத்திருக்கிறார்கள். ஆனால் பெண்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது? இருந்தது? சமுதாயத்திலே பார்க்கும்போது அது மிக மிக சகதி நிலையிலே இருந்தது. அந்த சகதி நிலையை நினைக்கும்போதுதான், நமக்கு வேதனையாக இருக்கிறது.

**பாவையர் நிலைமை பாதத்திற்கும் கீழே!**

மனுநூல், மனு தர்மம், மனு சாஸ்திரம், அர்த்தம் உள்ள இந்து மதம் என்று சொல்கிறார்களே அதிலே பெண்களை எப்படிக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்? பிரம்மனின் தலையிலே அந்தணன், தோளிலே அரசன், இடுப்பிலே வாணிகன், காலிலே சத்திரியன், பாதத்திலே சூத்திரன். பெண்களுக்கென்று ஒரு இடமே இல்லை. பாதத்திற்கும் கீழாக! அப்படி என்றால் நம்முடைய நிலைமை? நம்மை மதிக்கிறார்களா, மிதிக்கிறார்களா?

விதி ஒன்றே கதி,
பதி ஒன்றே எங்களுக்கு விதி,
காலிலே நீ போட்டு மிதி,
எங்களுக்கு மண்டையிலே
கிடையாது மதி,
இதுதான் பெண்கள் தலைவிதி!
நீயில்லாமல் எங்களுக்கு
வரப்போவது அதோகதி!

என்றெல்லாம் நினைத்துக் கொண்டு, அடுப்பு ஒன்றையே எடுப்பான துடுப்பாகக் கொண்டு அல்லவா, பெண்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

**கட்டிலறைப் பாவை பெட்டியறைப் பதுமை**

முன்னே இருள் சூழ்ந்து தண்ணீர் மேவிய இந்த நன்னீர் உலகத்திலே, பெண்கள் கண்ணீர் விடுவதற்காகவே படைக்கப் பட்ட பாத்திரங்களாக இருந் தாாகள்! அப்படிப்பட்ட ஒரு நிலைமை இன்று மாறியிருக் கிறது. மாற்றப்பட்டிருக்கிறது. இனிமேல் அப்படிப்பட்ட ஒரு நிலைமை வராது. ஏனென்று சொன்னால், பெண்ணுக்கெல் லாம் பெண்ணரசியாக விளங்கிக் கொண்டிருக்கிற தமிழ்த் தெய்வம் இந்த தமிழ் நாட்டினை ஆண்டு கொண்டி ருக்கிறது. இல்லையென்றால் எங்களுடைய நிலைமை - பாரதி எங்களைக் கும்மி அடிக்கச் சொன்னான். நாங்கள் கும்மியா அடித்தோம்? விம்மி விம்மி அழுது கொண்டிருந்தோம். பாடமே சொல்லித் தரவில்லை மம்மி என்கிறான் பையன்; வீட்டு வேலை செய்யறது ரொம்ப கம்மி என்கிறார் மாமியார்; சம்சாரம்னு தான் பேர், இது வெறுமடம்மி என்கிறார் வீட்டுக்காரர்; இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அல்லவா பெண் சமுதாயம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது! இதற்கு நூலாசிரியர்கள் ஒரு பங்கு, இலக்கியங்கள் பெரும் பங்கு.

> **நூல்கள் பல விதம்**
>
> ★ **புத்தகங்கள் மூன்று வகை யுண்டு. சில புத்தகங்கள் படித்து ஆராய்ந்து பார்க்க வேண்டியவை. சில படித்து மனப்பாடம் செய்ய வேண்டியவை. சில மென்று தின்று ஜீரணிக்க வேண்டி யவை.**
>
> **–பேகன்**

பெண்களைப் புகழ்வதற்காகவும், பெண்களைப் பாராட்டுவதற் காகவுமே இலக்கியத்தில் பெண்கள் படைக்கப்பட்டிருக் கிறார்கள். போகப் பொருளாக, அனுபவிக்கக் கூடிய பொருளாக, பெட்டிப் பாம்பாக, பெட்டியறைப் பதுமையாக, கட்டிலறைப் பாவையாக, பிள்ளை பெற்றுத் தரும் எந்திரமாக மட்டுமே இலக்கியங் களில் பெண்கள் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறார்கள்; படைக்கப் பட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு நினைப்புத் தான், அந்த சமுதாயத்திலே இருப்பவர் களுக்கும் இருந்திருக்கிறது. அந்த நிலைமைமாறி இப்போது நாங்கள் பெண்களுடைய உரிமைகளை, கேட்பதற்கு முன்பாகவே பெற்றுக் கொண்டி ருக்கிறோம்.

**வஞ்சமன நெஞ்சம் கொண்டவளோ பெண்?**

வயிற்றிலே பத்து மாதம் கருவிலே அடிமை, பெற்றவுடன் பெற்றோருக்கு அடிமை, மணந்த உடன் மணாளனுக்கு அடிமை, பிறகு மகனுக்கு அடிமை, பிறகு மண்ணுக்கு அடிமை. இப்படியெல்லாம் எங்களுடைய நிலைமை இருக்கிறதே என்று அந்தக் காலத்திலே பெண்கள் கண்ணீர் வடித்தார்கள். ஆனால் எந்தப் பயனும் இல்லை. அதற்கு யாராவது ஒரு நூலாசிரியரோ, யாராவது ஒரு இலக்கிய வாதியோ துணை போனார் களா என்று சொன்னால், சத்தியமாக இல்லை. எனக்கு முன்னால் பேசிய சகோதரி அவர்கள், சிலப்பதிகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். சிலப் பதிகாரத்திலே பெண்ணி

னுடைய பெருமை மிகவும் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த சமூகவாதிகள், அவர்களும் ஒரு நூலாசிரியர் என்ற முறையிலேதான் கோடிட்டுக்காட்டி இருக்கிறார்கள். கண்ணகியைப் பற்றிப் பாராட்டி சொல்லியிருக்கிறார். கண்ண்கியைப் பற்றி நமக்கு அறிமுகப்படுத்தும் போது

"போதிலார் திருவினாள்
புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின்
திறம்இவள் திறமென்றும்,
மாதரார் தொழுதேத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலால் பெயர்மன்னுங்
கண்ணகி யென்பாள் மன்னோ"
– என்று சொல்கிறார்.

பாட்டு சொல்லும்போதே நம்மை கொஞ்சம் மிரட்டுகிறார்கள். திறமெனில் சிறப்போடு இருக்க வேண்டும்; கற்போடு இருக்க வேண்டும்; காதலனோடு இருக்க வேண்டும்; அவர் என்ன சொன்னாலும் கேட்க வேண்டும்; இதுதான் நூலாசிரியர்களுடைய எண்ணம்.

> ★ புத்தகங்கள் இளைஞர்களுக்கு வழிகாட்டி. முதியவருக்குப் பொழுதுபோக்கு.
>
> –பெரிமி காலியர்
>
> ★ உங்களை அதிகமாகச் சிந்திக்க வைக்கும் புத்தகங்களே, உங்களுக்கு உதவி புரிபவை.
>
> –தியோடர் பார்க்கர்

> **காலம் ஒரு குரு**
>
> ★ **ஏனைய எல்லா ஆசிரியர்களையும் விட மிகச் சிறந்த ஆசிரியர் காலம். அது புகட்டிய பாடங்களுக்கு நிகராக இதுவரை யாருமே எப்போதுமே புகட்டியது கிடையாது.**
>
> **–எட்மண்ட் பர்க்**

### பெண்ணுக்குள் அடங்கியிருக்கும் திறமையை புரிந்து கொள்க

பெண்களைத்தான் நச்சுப் பாம்பாக, நாசகாரிகளாக, அடிமைகளாக இலக்கியவாதிகள் சித்திரிக்கிறார்கள். அதேநேரத்தில் காரியம் ஆக வேண்டுமென்று சொல்லுகிறபொழுது இதே கோவலன் கண்ணகியிடம் போய்ச் சொல்லுகிறான் "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே, அரும்பெரும் பாவாய், ஆருயிர் மருந்தே, பெருங்குடி வாணிகன் பெரு மடமகளே, மலையிடை பிறவா மணியே என்கோ, அலையிடை பிறவா அமிழ்தே என்கோ, யாழிடை பிறவா இசையே என்கோ, தாழிருங் கூந்தல் தையால்" என்றெல்லாம் பாராட்டுகிறான். இது நியாயமா? என்றுதான் கேட்கிறோம். துன்பம் வந்தால் உங்களுக்கு உதவி செய்வது பெண். இன்பம் வேண்டுமென்றால் வருவது பெண், ஆனால் தலைமை தர மட்டும் ஏன் மறுக்கிறீர்கள்? பெண்மை என்பது மென்மை, அதனுள் அடங்கி இருக்கிறது திறமை, இதைப் புரிந்து கொண்டால் உங்களுக்கு நன்மை, புரியாவிட்டால் நீங்கள் சந்திக்க வேண்டும் எதிர்காலத்திலே திண்மை, இதுதானே உண்மை. இதைச் சொல்லுவது என்னுடைய உரிமை, செவிமடுத்துக் கேட்பது உங்கள் கடமை, இப்படிப்பட்டு இருக்கிறது நிலைமை. ஆனால் இப்பொழுது இருக்கிறது அருமையான, பெருமையான திறமையான, வளமோடு, செழுமையோடு நடந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, அது வேறு நிலைமை.

### கோவலன் காலை ஒடித்தது நியாயமே

பெண்களைக் கேவலப்படுத்தி, போகப் பொருளாக சித்திரிப்பது எந்த விதத்தில் நியாயம்? இதே கோவலன், "என்னோடு போந்திருந்து, என்துயர் களைந்து, பொன்னே, கொடியே, தேனின் பாவாய், மீனின் கொழுந்தே, கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி", என்றெல்லாம் பாராட்டியவன் கடைசியிலே என்ன செய்தான்? இப்படிப்பட்ட ஒரு இழிநிலை பெண்ணுக்கு வரலாமா? ஒரு கல்லூரியிலே பாடம் நடத்திக்கொண்டிருந்த ஒரு தமிழ்ப் பேராசிரியர் கோபமாக வெளியே வந்தார். நான் என்னவென்று விசாரித்தேன், அப்போது அவர் சொன்னார், கோவலனுக்குப் பக்கத்திலே இருக்கிற காலைப் போடாமல், கோவலனை கேவலன் என்று ஒரு மாணவி எழுதியிருக்கிறாள், நான் அதை திருத்து என்று சொல்கிறேன், ஆனால், திருத்த

மாட்டேன் என்று சொல்கிறாள்" என்று என்னிடம் சொன்னார். உடனே நான் அந்த மாணவியை அழைத்து, "உனக்கும் கோவலனுக்கும் என்னம்மா சண்டை? ஏன் இப்படி கோவலன் காலை அநியாயமாக உடைத்தாய்? என்று கேட்டபோது, அதற்கு அந்த மாணவி சொல்கிறாள்: "அம்மா, நான் சிலப்பதிகாரம் படித்தேன், அதிலே அநியாயமாய் அழகுப் பதுமை கண்ணகியை விட்டு விட்டு மாதவியோடு இந்த கோவலன் ஓடி, கேவலத்தனமான வேலையைச் செய்தான், அதை என் மனம் ஜீரணிக்கவில்லை, அன்றைக்கு அவங்க அம்மா அப்பா அவன் காலை ஒடிக்க வில்லை, இன்னைக்கு நான் ஒடித்திருக்கிறேன்" என்னால் பதில் சொல்ல முடியவில்லை. உண்மை. நாம் ஜீரணித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்டவர்களையும் இந்த சமுதாயம் மன்னித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு இலக்கியங்கள் உதவிக் கொண்டி ருக்கின்றன.

**பாதகம் விளையுது பழமொழியால்!**

இலக்கியங்களை மட்டுமல்ல, பழமொழிகளையும் அதற்கு தகுந்தமாதிரி உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அர்த்தத் தையே மாற்றுகிறார்கள். 'பெண் புத்தி பின்புத்தி'. அந்த 'பின்' என்பதிலே வரக்கூடிய 'ன'கர வேறுபாடுகளை அவர்கள் அறியவில்லை. பின் என்றால் கூர்மை. பெண்புத்தி கூர்மை யான புத்தியுடையவர்கள் என்பது பொருள். இன்னொரு பழமொழி, 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' நல்லதை ஆக் குபவளும் பெண், தீயதை அழிப்பதும் பெண்.

'மேட்டான்காட்டை உழுத வனும் கெட்டான், மேனாமினுக் கியை கட்டினவனும் கெட்டான்' என்று ஒரு பழமொழியாம். இவர்களுக்கு வசதியாக பழமொழியை எழுதிக் கொள்வது. இதைத் திருப்பி எழுதுவதற்கு பெண்களால் முடியாதா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**சேதம் அடைந்தோம் கவிமொழியால்**

கவிதைகள் வேறு எழுது கிறார்கள். பெண்களைப் பற்றி நல்ல கருத்துக்களைக் கவிதை களாக எழுதக் கூடாதா? "இல்லந்தோறும் பெண்களைப் படைத்துவிட்டு பிறகு ஏன் எமனை படைத்தாய்?" இப்படி ஓர் ஆசிரியர் எழுதியிருக்கிறார். அதோடு மட்டுமல்ல, 'ரோஜா வின் அழகு, புறாவின் மென்மை, தேனின் இனிமை, அதோடு கொஞ்சம் நல்ல பாம்பின் விஷம், இவைகளை யெல்லாம் சேர்த்துப் படைக்கப் பட்டதுதான் பெண்' என்று ஒரு கவிஞர் எழுதுகிறார், அதற்கு ஒரு பரிசு. அதோடு மட்டு மல்லாமல், நகைச்சுவை என்று பத்திரிகையிலே வரக்கூடிய துணுக்குகளில் கூட பெண்களை தரம் தாழ்த்தி, கேவலமாக அடிமைப்படுத்தி எழுது கிறார்கள். ஒரு ஜோசியரைப் பார்க்க ஒருவர் போகிறார். ஜோசியர் அவரைப் பார்த்துவிட்டு உங்களுக்கு சனி பிடித்து ஏழு

★ **கல்வியறிவு இல்லாதவன் துர்ப்பாக்கியத்தின் மூல வேர்.**

**- பிளேட்டோ**

★ **பேராசையைப் போக்க நினைத்தால் அதன் தாயாகிய படாடோபத்தை ஒழிக்க வேண்டும்.**

**- சிசரோ**

வருஷமாச்சு என்கிறார், உடனே பார்க்கப் போனவர் சொல்லு கிறார், "கரெக்டா சொன்னீங்க, எனக்குக் கல்யாணம் ஆகி ஏழு வருஷம் ஆச்சு, என் சம்சாரத் தின் பெயர் பத்மாசனி". என்றாராம். இதற்குப் பத்திரி கையிலே பரிசு கொடுக் கிறார்கள். இப்படிச் செய்ய லாமா? இது நியாயமா? இது அடுக்குமா? இப்படி நீங்கள் எதைவேண்டுமானாலும், பழ மொழிகளாக இருந்தாலும், அல்லது சாதாரண கருத்துக் களாக இருந்தாலும், நகைச்சுவை யாக இருந்தாலும் பெண்களைக் கேவலப்படுத்தி எழுதலாமா?

**இரு கட்சிக்கும் பொதுவாக இருக்க வேண்டிய பொருள் அல்லவா கற்பு**

திருவள்ளுவர் பெருமை யைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர் சொன்னார், "பெண்ணின் பெருந்தக்க யாவுள"! இத்தோடு அவர்கள் நிறுத்திவிட்டார்கள். மீதியைச் சொல்லுங்கள், "கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்".

அது ஏன் அப்படிப் போட்டு மிரட்டுகிறீர்கள்? ‘கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்” என்றால் என்ன பொருள்? பெண்ணுக்குக் கற்பு வேண்டும்! கற்பு வேண்டும்; ஆனால் இரு கட்சிக்கும் அதை பொதுவிலே வைப்போம். அதுதானே நியாயம்?

‘வாழ்க்கைத் துணை நலம்’ என்று எழுதியிருக்கிற வள்ளுவரைப் பார்த்து கேட்கிறேன். ஏன் ஆண்களுக்கென்று ‘வீட்டுக்காரா் துணை நலம்’ என்று ஏதாவது வைத்திருக்கலாம் அல்லவா? இல்லறம் வைத்திருக்கிறீர்கள், வாழ்க்கைத் துணை நலம் வைத்திருக்கிறீர்கள், மக்கள் பேறு வைத்திருக்கிறீர்கள். ஏன் எல்லாம் பெண்களுக்கே புத்தி மதியா? வேதனையாக இருக்கிறது. கடந்த காலத்தை நாங்கள் புரட்டிப் பார்க்கிறபோது, பெண்களுடைய நிலைமை மிகவும் கீழாகப் போய்க் கொண்டிருக்கிறது.

இப்படிப் பெண்கள்படும் வேதனைகளைப் பார்த்து பாரதியாரும் பாவேந்தரும் கூட சேர்த்து அந்த பெண்ணினுடைய அழுகைக் குரலாக ஒரு கவிதையை சொல்லுகிறார்கள். ஒரு பெண் சொல்லுகிறாள், தன்னுடைய கணவனைப் பார்த்து. “ஐயா எனக்கு அடுப்பும் நீங்கள் - அவள் தன்னுடைய வீட்டிலே இருப்பதைப் பார்த்து சொல்லுகிறாள் - எனக்கு அடுப்பும் நீங்கள், துடுப்பும் நீங்கள்; சட்டியும் நீங்கள், பானையும் நீங்கள்; வீடும் நீங்கள் மாடும் நீங்கள்; வெறுப்படைந்து வெளியே சென்றால் காடும் நீங்கள் கட்டையும் நீங்கள்; கழுதையும் நீங்கள் குதிரையும் நீங்கள்; எனக்கு எல்லாமே நீங்கள் தான்” என்று. அந்தக் கருத்துக்கு அந்த வீட்டுக்காரர் பரிசு கொடுக்கிறார். அதோடு மட்டும் அல்லாமல் பாவேந்தர் சொல்லுகிறார்

“ஆடை அணிகலன் ஆசைக்கு
வாச மலர் தேடுவதும்,
ஆண்களைச் சேவித்து இருப்பதும்,
அஞ்சுவதும் நாணுவதும்,
ஆமையைப் போல வாழ்வதும்,
கெஞ்சுவதுமாய் கிடக்கும்
மகளிர் குலம்
மனித சமூகத்திலே
ஒரு வலுவற்ற பகுதி”

என்று சொல்லுகிறார். அவர்களைப் பார்த்து வேதனைப் படுவதைத் தவிர என்ன செய்ய முடிந்தது?

இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்திலே தான், பெண்களுடைய நிலை கேவலம் அடைந்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலேதான், இதே கவிஞர்கள் பெண்களுக்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று வந்தார்கள். குரல் கொடுத்தார்கள்.

**பத்தாதா பத்து குணம்?**
**பின்னும் பற்ற வேண்டுமா**
**பயிர்ப்பு குணம்**

மானம், மரியாதை, சூடு, சுரணை, ஆண்மை, வீரம், அன்பு, அடக்கம், அறிவு, அச்சம் என்று பத்து குணங்களை எல்லாருக்கும் மொத்தமாக இருக்கும் போது பெண்ணுக்கு என்று அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று தனியாக நான்கு குணங்கள் எதற்கு? அச்சத்தை விடுங்கள், அது பயம். அது போல மடம் என்றால் அறிந்தும் அறியாதது போல, தெரிந்தும் தெரியாதது போல இருக்கக் கூடிய பேதமைத் தன்மை; நாணம் என்னும் வெட்க குணம் நமக்கெல்லாம்.. ஏன் எல்லோருக்கும் இருக்கலாம். இந்த பயிர்ப்பு என்ற குணம் என்ன தெரியுமா? பயிர்ப்பு என்ற குணத்திற்கு என்ன பொருள்? ஒரு பெண்ணின் மீது அவளுடைய உடலின் மீது, அல்லது ஆடையின் மீது தன்னுடைய கணவன் அல்லாதவருடைய தீண்டுதலோ, அல்லது ஸ்பரிசமோ பட்டாலும் கூட அவள் அதைத் தடுத்து, திருத்தி, ஒதுக்கி உணர வேண்டும். இதுதான் பயிர்ப்பு. அப்படியென்றால் இந்தக் காலத்திலே கல்லூரிக்கு எத்தனைப் பேர் போக முடியும்? பேருந்திலே எத்தனைப் பேர் பயணம் செய்ய முடியும்? இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து, எங்களுடைய தங்கத் தமிழகத்தின சிங்கத் தலைவியே, நீங்கள் தான், இந்த நானிலத்திலே, யாருமே செய்ய முடியாத அளவுக்கு, மூன்று தமிழ் என்று மூவாயிரம்

---

★ ஓவியம் என்பது மௌனக் கவிதை. கவிதை என்பது பேசும் ஓவியமாகும்.

—எமர்சன்

**சம்மதமில்லா மதம்**
**தாமதம்!**

★ தாமதம் செய்யாதே; பொன்னான காலங்கள் பறக்கின்றன.

—லாங்ஃபெல்லோ

ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருந்ததற்கு, நான்காவது தமிழை நானிலத்தில் சொன்ன நீங்கள் தான், எங்களுக்கு ஒரு விடிவு காலத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள்.

### பெண் குலத்தை வாட்டும் பெரும் சிக்கல்

"நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும். நிலத்தில் யாருக்கும் அஞ்சாத தன்மையும், தெளிந்த ஞான செருக்கும் உடைய செம்மை மாதர் திறம்... " என்று சொல்லுகிறார்கள். " மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம், ஏட்டினைப்பெண்கள் தொடுவது பாவம் என்றே எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார், வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்றெல்லாம் சொல்லு கிறார்கள். பெண்கள் கல்வி கற்றார்கள். ஆனால் பெண் களுடைய சமூகத்திலே இருக்கக் கூடிய அவலநிலை மாறியதா? வரதட்சணைக் கொடுமை மாறியதா? என்பதை எண்ணிப் பாருங்கள். இதிலே என்ன கொடுமை தெரியுமா? விலை பேசுவதும் பெண், விலை யாவதும் பெண், விலைக்கு விற்கப்படுபவளும் பெண். இப்படிப்பட்ட ஒரு சமூக சிக்கல் இந்தப் பெண் குலத்தை வாட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு பெண்ணைப் பார்ப்ப தற்கு மாப்பிள்ளை வீட்டார் போகிறார்கள். பெண்ணைப் பிடித்து விட்டது. உடனே மாப்பிள்ளையின் தாய், பெண்ணினுடைய தாயைப் பார்த்துக் கேட்கிறாள் மத்த விஷயம் பேசலாமா? என்று. பேசுங்கள் என் பெண்ணின் தாய் சொல்லுகிறாள். உடனே அவள் சொல்லுகிறாள்:

அருமை நிறை, பெருமை நிறை
திறமை நிறை பையன்,
அமெரிக்கா சென்று பட்டம்
வாங்கி வந்த பையன்.
அஞ்சு இலட்சம், ஆறு இலட்சம்
செலவழிச்ச பையன்,
அத்தனைக்கும் தட்சணையை
நம்பி இருக்கும் பையன்.
சீர் வரிசை பெரிதல்ல ஸ்டீல்
பீரோ ஏழு போதும்.
எவர்சில்வர் பாத்திரங்கள்
எழுநூறு போதும் போதும்,
ஹீட்டர் போட்டுக் குளிப்பவன்,
ஸ்கூட்டரிலே தான் போவான்,
லேட்டஸ்டா வாங்கிடுங்க அவன்
டேஸ்டுக்கு ஒத்து வரும்.
என் மகன்,
பாரதியார் பக்தன் அவன்,
மாருதி கார் பிரியன் இவன்,
மாருதி கார் ஒன்று போதும்
சாரதி கூட தேவையில்லை,
அமெரிக்காவிலே படிச்சதுக்கு
அம்பது பவுன் போடுங்க,
இந்தியாவிலே படிச்சதுக்கு
இருக்க வீடு ஒண்ணு எழுதுங்க
பொண்ணு பிள்ளை
பொழைச்சுக்க பொட்டியிலே
அஞ்சு இலட்சம்
மொத்தமாகத் தந்திட்டால்
முகூர்த்த நாள் பார்த்துடலாம்.
சீர் வரிசை பெரிசல்ல!"

என்று சொன்னாளாம் பிள்ளையைப் பெற்றப் பெருமகள்.

வேதனைப் படுகிறோம், வெட்கப்படுகிறோம், வரதட்சணை கொடுமை எப்படி தலை விரித்தாடுகிறது. கன்னித் தன்மை கழியாமல் எத்தனை கன்னிப் பெண்கள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்? கன்னியர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்? இதிலே சமூகம் எங்கு சமூகமாக வாழ்வது? ஆணிவேராக, அச்சாணியாக இருக்கக் கூடிய பெண்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, எப்படி சமூகம் சமூகமாகும்?

**பாரதி சொன்ன**
**புதுமைப் பெண்**
**பார் புகழ்**
**புரட்சித்தலைவியே!**

இந்த நிலைமையெல்லாம் மாறி, பெண் விடுதலைக்கு வித்திட்டு, அந்த பாரதி சொன்னானே- புதுமைப் பெண், புரட்சிப் பெண், புதுயுகப் பெண் என்று சொன்னானே, அக்க் காற்றாய், இகக் காற்றாய், யுகக் காற்றாய், தமிழ் என்று சொல்லக் கூடிய உயிர்க் காற்றாய் வலம் வந்து இன்று பெண்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களா கவும், அமைச்சர் பெருமக்களா கவும் வாழக்கூடிய விதத்திலே முப்பது பெண்களை முத்தாக சட்டமன்ற உறுப்பினர்களாக சட்டமன்றத்திலே அமர்த்திக் காட்டி, எங்களை அழகு பார்த்துக் கொண்டிருக்கிற அழகு தேவதையே, நீங்கள்

**சுதந்தரம்**

**★ சுதந்தரம் இல்லாத தேசம், உயிரில்லாத உடல் போல. உயிர் வாழ உணவு எப்படி அவசியமோ, அது போல சுதந்தரமாய் வாழத் தியாகம் அவசியமாகும்.**

**—மூதறிஞர் ராஜாஜி**

தமிழ்! தாயே! தமிழே தமிழுக்கு மகாநாடு எடுக்கிற அதிசயத்தை நான் இங்குதான் பார்க்கிறேன். முத்தமிழின் தேவதையே, அந்த தமிழுக்கு நீங்கள் மகாநாடு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்று பெண் சமுதாயம் உயர்ந்து கொண்டிருக்கிறது. தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று பெண் சமுதாயத்தைப் பொறுத்தவரை, எதையும் சாதிக்க முடியும் என்ற ஆற்றலோடு இருக்கிறது. அப்படிப் பட்ட ஒரு திறமையை நீங்கள் வளர்த்திருக்கிறீர்கள். பார்த்தீர்கள் நீங்கள், எதனால் பெண் அடிமை ஏற்படுகிறது? எதனால் பெண்ணுக்கு தாழ்வு மனப் பான்மை உண்டாகிறது? அந்தக் கல்வியைக் கொடுக்க வேண்டும், இட்டீர்கள் கட்டளை. பேசினார்கள், 100 விழுக்காடு கல்வி வேண்டும் என்று. 100 விழுக்காடு பெண் கல்வியை தாயே நீங்கள் வழங்கியிருக் கிறீர்கள், அறிவொளி இயக்கத்தின் மூலம், முறைசாராக் கல்வி முறையான கல்வி, நேர்முக கல்வி, அஞ்சல் வழி கல்வி, எல்லா வழிக் கல்வியிலும், 100 விழுக்காடு பெண் கல்வியை கொடுத்திருக்கிறீர்கள். அந்த கல்விச் செல்வம் வந்தபிறகு தான் அறியாமை மாறும், அந்த அறிவொளி எரியும் போது தான் அறியாமை இருள் அகலக் கூடும், என்பதை எண்ணி, நீங்கள் அறிவொளியை ஏற்றி விட்டீர்கள்.

### பெண் சமூகத்தைக் காக்க பேருள்ளம் கொண்ட தலைவி

தாயே! சிந்தித்துப் பார்த்தீர்கள் ஜாதிக் கொடுமையை. ஜாதிக் கொடுமை இருக்கும் வரை மீள முடியாது, சமூகத்தைத் திருத்த முடியாது. எனவே திட்டம் போட்டீர்கள், சட்டம் ஆக்கினீர்கள். 69 சதவிகிதம் என்பதைச் சொல்லி மக்கள் மன்றத்திலே மட்டுமல்ல, உலக அரங்கிலேயே உயர்ந்த தலைவியாக, உயர்ந்து விட்டீர்கள்.

அண்ணா சொன்னார் "பெண்கள் எல்லாம் யாராவது ஒருவரைக் காவலுக்கு அழைக் கிறார்கள். பெண்ணுக்குக்காவல் இருப்பதை மாற்றி, பெண்ணே காவல் காக்கக் கூடிய ஒரு சூழ்நிலை வரும்போது தான் இந்த நாடு விடியும்" என்று சொன்னார். வெண்தாடி வேந்தர் பகுத்தறிவுக் காவலன் பெரியார் சொன்னார், "பெண்கள் காவலராக்கப்பட வேண்டும்". அவர்கள் சொன்ன வழி, தாயே, பெண்ணைக் காவலராக்கி, நாங்கள் வீட்டை மட்டும் நடத்தவில்லை, இந்த நாட்டையும் நடத்துவோம், ஏன் பேரூந்தையும் சேர்த்து நடத்துவோம் என்று ஓட்டுநராக, நடத்துனராக, காவலராக,பெண்களை ஆளுநராக, அரசியல் மேதைகளாக, விஞ்ஞானியாக, மெய்ஞ்ஞானியாக இன்று உயர்த்தியிருக்கிறீர்களே, பெண்கள் சமூகம் இன்று உயர்ந் திருக்கிறது. தலைநிமிர்ந்து நிற்கிறது தாயே. இதைத்தான் பெண் சமூகம் வேண்டிக் கொண்டிருக்கிறது. இதைதான் பெண் சமூகம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

### பொறுக்காத அழுக்காற்றுச் சமூகத்தைப் புறந்தள்ளுவோம் திறம் கொள்ளுவோம்

இந்த உலகத்தமிழ் மாநாட்டை, நீங்கள் சீரும் சிறப்புமாக நடத்தும்போது, பெண் சமூகமே உச்ச நிலைக்கு, இமயத்தின் உச்சிக்குப் போய் விட்டது. அது பொறுக்காத ஒரு சமூகம் இருக்கிறது. அது அழுக்காறு சமூகம். அந்த அழுக் காறு சமூகம் இந்த உலகத்தமிழ் மாநாடு நடக்காது, நடக்க முடியாது, நடக்க விட மாட்டோம் என்றது. ஒருவரைப் பற்றிப் பாராட்ட வேண்டும் என்றாலும் சரி அல்லது ஒருவரைப் பற்றி குறை சொல்ல வேண்டும் என்றாலும் சரி, அதற்கு நமக்கு தகுதி வேண்டும். ஆனால் தகுதியே இல்லாதவர்கள் எல்லாம், குறை சொல்லுகிறார்கள் என்று நினைக்கும்போது உண்மையிலேயே வேதனையாக இருக் கிறது, நாட்டுக்கு வேதனையாக இருக்கிறது, தமிழுக்கே வேதனையாக இருக்கிறது, இந்தத் தரணிக்கே வேதனையாக இருக்கிறது.

குறை சொல்வதற்கு முன்பு நீங்கள் உங்களுக்குள்ளாக சொந்தத் தலைவர் யார், வந்த தலைவர் யார், சேர்ந்த தலைவர் யார், போன தலைவர் யார்

**பெண்ணின் நிலை உயரும் போது ஆணின் நிலையும் உயரும். ஒவ்வொருவரின் நிலையும் உயரும் போது மனித சமுதாயத்தின் நிலையும் உயர்வடையும்.**

**–அண்ணல் காந்தியடிகள்**



நாம் இலட்சியத்தை நோக்கி எவ்வளவு தூரம் போகிறோம் என்பது பின்பற்றும் வழிகளின் தூய்மையையே பொறுத்திருக்கிறது.

அகிம்சை ஆராய்ச்சிகளைச் செய்யவும், தீரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் ஆணையிடப் பெண்ணே அதிகத் தகுதி வாய்ந்தவள்.

அன்பே மனித வர்க்கத்தின் தருமம்; மிருக பலத்தைவிட அது பெரியது; உயர்வானது.

நீயும் வாழ்; மற்றவர்களையும் வாழவிடு. ஏனெனில், பொறுமையும் சகிப்புத் தன்மையுமே வாழ்க்கையின் விதியாகும்.

என்பதை முடிவு செய்து விட்டு, அடுத்தவர்களைப் பற்றியெல்லாம் பேசலாம். பாராட்டுவதற்கும் உங்களுக்குத் தகுதி வேண்டும். புரட்சித்தலைவியைப் போல உங்களுக்கு அந்த அளவுக்கு பெருமனது கிடையாது. அவர் இன்று குன்றின் மேல் இட்ட விளக்காய் குவலயத்தின் மணி விளக்காய், மாதர் குல மங்கா விளக்காய், பெண்களின் பெரு விளக்காய், கன்னியர் போற்றக்கூடிய கற்பூர விளக்காய், துறவியரும் வாழ்த்தக் கூடிய தூய விளக்காய், வழி காட்டக் கூடிய ஒளி விளக்காய் மிளிர்ந்துக் கொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு அவர்களுக்குத் பெருந்தன்மை கிடையாது. ஆனால் தகுதி பார்த்து பேச வேண்டும். புரட்சித் தலைவி மாநாட்டை நடத்துவாரா என்று கேட்டார்கள். நடத்தி விட்டார். நிகழ்ச்சிகள் நடந்துக் கொண்டிருக்கிறது. பிரதம அமைச்சர் வருவார், பேசுவார், செல்வார். இறுதியில் புரட்சித் தலைவியே வெல்வார் என்பது தமிழக மக்களுடைய தீர்ப்பு. இதுதான் சமுதாயத்தினுடைய வெற்றி. பெண் சமூகம் உயர்கிறதே, பெண் சமூகம் நினைத்ததை நடத்திக் காட்டுகிறதே. இதுதான் புரட்சித் தலைவியினுடைய வளர்ச்சி.

புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பெண் சமூகத்தினுடைய அடிப்படையான கொடுமை, இந்த சிசுக் கொலை, தடுத்து நிறுத்தப்பட்டது. உலக மக்கள் இங்கு அணி திரண்டு வந்திருக்கிறீர்களே, மணி மணியாய். அமர்ந்திருக்கிறீர்களே, இந்த அன்பு தெய்வத்தை பாராட்ட வந்திருக்கிறீர்களே, நீலப்பூ குழலாக, குவளைப்பூ கண்களாக, எள்ளிற்பூ மூக்காக, சங்குப்பூ செவியாக, நீலாம்பூ வாயாக, கோவைப்பூ இதழாக, வெண்டைப்பூ விரலாக, குறிஞ்சிப்பூக் கரமாக, அனிச்சம்பூ நிறமாக, ஆம்பல்பூ அமைப்பாக இந்த அவனியை கவனிக்க பவனி வந்து கொண்டிருக்கிற, இந்த சரித்திரத்தின் பவித்ர தேவியாக விளங்கிக் கொண்டிருக்கிற, புரட்சித்தலைவியினுடைய சட்ட திட்டம் தான், அருமையான முறையிலே இன்று பெண் சமூகத்தை உயர்த்தியிருக்கிறது. இடைக்காலத்திலே தாழ்ந்திருந்தது. இன்று உயர்ந்திருக்கிறது. இமாலய வெற்றியை அடைந்திருக்கிறது".

இவ்வாறு திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்கள் உரையாற்றினார்.

## வர்மக் கலையும் வைத்தியமும்

ஆசிரியர் : சீதாராம் சுப்பிரமணியம்

வெளியீடு : கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92, கங்கையம்மன் கோயில் தெரு
வடபழனி
சென்னை - 600 026.

பக்கம்: 128 விலை: ரூ.18

உலக முழுவதும் தற்போது பிரபலமாகி இருக்கும் ஜப்பானியத் தற்காப்புக் கலைகளின் தோற்றமே தமிழகம்தான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

வர்மக்கலையும் தமிழ்நாட்டில் தோன்றிய அரிய கலைகளில் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று. இவ்வரிய கலையை விளக்குகிறது இந்நூல்.

வர்மக் கலைகள், அவற்றைப் பிரயோகிக்கும் முறைகள், விடுவிக்கும் முறைகள், மருத்துவத்தில் எப்படி அவை பயன்படுகின்றன என்பதை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் படங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது.

—குமார்

## எல்லா நோய்களுக்கும் தமிழ் வைத்தியம்

ஆசிரியர்: சூரியநாத்

வெளியீடு: கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
வடபழனி,
சென்னை - 600 026.

பக்கம்: 128 விலை: 18

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முன்னோர் வாக்கு. நோயுறும்போது நம் உடல் மட்டுமின்றி உள்ளமும் பாதிக்கப்படுகிறது என்பது மறுக்க




முடியாத உண்மை. இந்நிலையை முற்றிலும் தவிர்க்க, இந்நூலில் நம் உடலின் ஒவ்வொரு உறுப்பையும் குறிப்பிட்டு, அதன் அமைப்பு, அவற்றைத் தாக்கும் நோய்கள், நோய்த் தடுப்பு முறைகள், தேவையான மருந்துகள் தயாரிக்கும் முறை, உபயோகிக்க வேண்டிய அளவுகள் என அனைத்து விவரங்களையும் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

—கு. மல்லிகா

## பல்வேறு பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரிப்பது எப்படி?

ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியீடு: மணிமேகலைப்பிரசுரம்,
த.பெ. எண் 1447
4, தணிகாசலம் சாலை
தியாகராய நகர்
சென்னை 600 0177

பக்கம்:120 விலை ரூ.16.50

பிளாஸ்டிக் பொருட்கள் எப்படித் தயாரிப்பது அதற்கு என்னென்ன தேவை, இத்தொழிலுக்குத் தேவையான பொருட்கள் எங்கே கிடைக்கின்றன. அரசு செய்யும் உதவிகளிலிருந்து, உத்தேச வரவு செலவுத் திட்டங்கள் வரை விரிவாக விளக்கும் நூல். இத் தொழிலுக்குச் சிறந்த வழிகாட்டி.

## கணபதியம்

ஆசிரியர்: கோ. கோமகன்

வெளியீடு: வெண்தாமரை வெளியீடு
78/2, மந்தைவெளித் தெரு, மந்தைவெளி,
சென்னை 600 028

விலை: ரூ.10.00 பக்கம்: 99

நூலின் பெயர் கணபதியம் என்றிருந்தாலும், முதலில் குண்டலினி இயக்கம் பற்றி விவரித்து (விளக்கப் படங்களுடன்), விநாயகத் தத்துவம், விநாயக சதுர்த்தி, விநாயக வழிபாடு பற்றியெல்லாம் ஓர் ஆய்வே நடத்தியிருக்கிறார் ஆசிரியர்.

## தமிழ்நாட்டில் இலவசச் சட்ட உதவிகளைப் பெறுவது எப்படி?

ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்
4, தணிகாசலம் சாலை,
சென்னை 17.

விலை: ரூ.17 பக்கம்: 123

உழைக்கும்போது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் எந்தச் சட்டத்தின்கீழ் அதன் இழப்பீட்டைப் பெறுவது, சட்ட வகைகள், தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியமும், அதன் பணிகளும் மேல் முறையீடுகள், சட்ட உதவித் திட்டம், வழக்குரைஞர்களின் ஊதியம், நிவாரணத் தொகை, சிறைக் கைதிகளுக்கும் சட்ட உதவி என்று பாமரரும் சட்டங்களை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில், நூல் அமைந்துள்ளது.

—குமாரசாமி

## சின்ன சின்ன சிட்டுகள் சிங்காரப் பாட்டுகள்

ஆசிரியர்: கவிஞர் சங்கை
வேலவன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட் லிட்.,
41பி, சிட்கோ
இண்டஸ்டிரியல்
எஸ்டேட்.
சென்னை-600 098

விலை: ரூ.9 பக்கம்: 88

சிறுவர்களின் அறிவாற்றலை வெளிக் கொணர உதவும் வண்ணம் வெளியிடப்படும் நூல்களின் வரிசையில் இக் கவிதைத் தொகுப்புக்கும் முக்கிய இடமுண்டு. எளிய நடையில் தொகுக்கப்பட்டுள்ள இந்நூலில், இயற்கைப் பூக்கள், உறவுப் பூக்கள், மழலைப் பூக்கள், விளையாட்டுப் பூக்கள், அறிவுப் பூக்கள், நீதிப் பூக்கள், பொதுப் பூக்கள் எனப் பல வகையான நறுமண வண்ணப் பூக்களை, இனிய தமிழ் எனும் நார் கொண்டு மாலையாக்கி, சிறுவர் களின் உள்ளங்களில் மணம் கமழும் வண்ணம் படைத்துள்ளார் ஆசிரியர்.

—அ. மதிமாறன்

## தியாக மலர்கள்

ஆசிரியர்: கவியழகன், எம்.ஏ.,

வெளியீடு: சூடாமணி பிரசுரம்,
36-4/7, கோவிந்தன் சாலை,
(முதல்தளம்),
மேற்கு மாம்பலம்,
சென்னை 600 033

விலை: ரூ.15 பக்கம்: 92

நமது தமிழ் நீதி நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள எக்காலத் திற்கும் பொருத்தமான நீதிக் கருத்துக்களுடன், இக்காலச் சூழ் நிலைக்கும் ஏற்றவாறு எழுதப் பட்டுள்ள சிறுகதைத் தொகுப்பு இது. எழுத்தறிவு, இயக்கப்பணி, இரத்ததானம், பணிவுடைமை, தேசப்பற்று, நீதிக் கருத்துக்கள் போன்றவற்றை விளக்கும் கதைகள் இந்நூலில் இடம் பெற்று உள்ளன. ஒவ்வொரு கதையும் நீதி போதிக் கின்றன. இளைய தலைமுறையினர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும்.

## விடுதலை வீராங்கனை ருக்மிணி லட்சுமிபதி

ஆசிரியர்: ரகமி

வெளியீடு:
ஸ்ரீமதி ருக்மிணி லட்சுமிபதி
நூற்றாண்டு விழாக் கமிட்டி,
27, இரண்டாவது பிரதான
சாலை, சி.ஐ.டி. காலனி,
சென்னை 600 004.

பக்கம்: 223 விலை: ரூ.70

விடுதலை வேள்வியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தியாகத் தீபங்கள் பலர். அவர்களுள் ருக்மிணி லட்சுமிபதிக்கும் முக்கிய இடமுண்டு. இளம் வயதிலேயே பொதுவாழ்வில் ஈடுபட்டுச் செயலாற்றியவர். சைமன் கமிஷன் குழு பகிஷ்கரிப்புப் போராட்டம், வேதாரண்யம் உப்புச் சத்யாக் கிரகம், ஒத்துழையாமை இயக்கம், தனி நபர் சத்யாக்கிரகம் இப்படிப் பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர் இவர். முதல் பெண் துணை சபாநாயகர், முதல் பெண் அமைச்சர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. அன்னாருடைய வாழ்க்கை வரலாற்றைத் துல்லியமாக ஆராய்ந்து, அரிய புகைப் படங் களுடன் திரட்டித் தந்திருக்கிறார் நூலாசிரியர் ரகமி. குறிப்பாக, இளைய பாரதம் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும்.

—பி.வி. கிரி

## மண்ணுக்குள் அறிவியல்

ஆசிரியர்: தமிழ்மணி

வெளியீடு: மோகன் புத்தக
நிலையம்,
4, வள்ளலார் தெரு,
பத்மநாப நகர்,
சூளைமேடு.
சென்னை - 600 094.

பக்கம்: 112 விலை: 14

மண்ணின் தோற்றம், எரிமலை களும் அதன் விளைவுகளும், நில அதிர்ச்சி, மண்ணுக்குள் கனிவளம், நிலத்தடி நீர், வேளாண் துறையில் மண், நில எண்ணெயும் நில வாயும், மணிக் கற்களும் - குறை மணிக் கற்களும் ஆகிய 8 தலைப்புகளின் கீழான கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

மண்ணில் கலந்துள்ள அல்லது மண்ணில் புதைந்துள்ள அறிவியல் உண்மைகள் ஒவ்வொரு கட்டுரை யிலும் உருப்படியாக விளக்கப்பட்டி ருக்கின்றன. அறிவியல் தமிழ் வளர இவ்வகை நூல்கள் பெரிதும் வரவேற்கப்படலாம்.

கடினமான அறிவியல் செய்திகள் எளிமையான தமிழில் விளக்கப்பட்டுள்ளன. படித்துப் பயன்பெறலாம்.

—சோழராஜா

☆ புத்தகங்கள் சிந்தனைக்குப் போதை தரும் புனிதப் பொருள்கள்.

—ராபர்ட்

☆ புத்தகங்கள் அற்ற வீடு, உயிரற்ற உடல்.

—சிசேரோ

'பத்துப்பாட்டு' காட்டுகிற வீர இலக்கணம்

# புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்!

**முனைவர். சிற்பி. பாலசுப்பிரமணியம்**

**1995-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தஞ்சைத் தரணியில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், 'பண்டைய இலக்கியம்' பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று, முனைவர். சிற்பி பாலசுப்பிர மணியம் அவர்கள் 'பத்துப் பாட்டில் வீரம்' என்னும் தலைப்பில் ஆற்றிய உரை.**

**வீரம்** தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற விளைபொருள். மேற்கு மலையிலே தேக்கும், கிழக்குக் கடலிலே முத்தும் விளைவது போலத் தமிழ்நாட்டு மண்ணிலே விளைந்த ஒப்பற்ற பொருள் வீரம். இந்த வீரத்தை

"சதையைத் துண்டு துண்டு ஆக்கினும் உன் எண்ணம் சாயுமோ"

என்று கேட்ட பாரதியுடைய பாடலில் பார்த்திருக்கிறோம்.

"வெங்கொடுமைச் சாக்காட்டில்
விளையாடும் தோள்
எங்கள் வெற்றித் தோள்கள்"

என்று பாடிய பாரதிதாசனுடைய கவிதையிலே ஒலிக்கக் கேட்டு இருக்கிறோம்.

"பொருதடக்கை வாள் எங்கே?
மார்பு எங்கே?

"போர்முகத்தே எவர் வரினும்,
புறங்கொடாத

"பருவயிரத் தோள் எங்கே?
எங்கே? என்று

"பைரவியைக் கேட்பாளைக்
காண்மின்! காண்மின்!

என்று ஒலித்த கலிங்கத்துப் பரணியிலே கேட்டு இருக்கிறோம்.

"பட்டாங்கில் யானுமோர் பத்தியே
யாமாகில்,

"ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன்
மதுரையையும்!"

என்று முழங்கிய கண்ணகியின் சிலம்பின் ஒலியிலே இந்தக் குரலை நாம் கேட்டு இருக்கிறோம்.

"மன்னர் அழைத்து வரப் பணித்து இருக்கிறார்; இல்லை என்றால் இழுத்துவரக் கட்டளையிட்டு இருக்கிறார்" என்று சொன்ன நேரத்திலே,

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்"

என்று பேசிய மகத்தான வீரத்தைத் திருநாவுக்கரசருடைய தமிழில் சந்தித்து இருக்கிறோம்.

இத்தனை வீரத்திற்கும் அடிப்படையாக அமைந்தது- நம்முடைய சங்க காலச் சான்றோர் பெருமக்கள் எழுத்துக்கு எழுத்து மெருகேற்றி நம்முடைய நெஞ்சிலே அமர்த்தியிருக்கின்ற வீரம்தான் இத்தனைப் பண்பாட்டை நமக்கு

ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்று பார்க்கிறோம்.

### தனித் தன்மை மிக்க வீரம்

அப்படிப் பேசுகிற நேரத்திலே கூட புறநானூற்றிலே வீரம், பதிற்றுப் பற்றிலே வீரம் என்று சொல்லியிருந்தால் அது மிகப் பொருத்தமாக இருந் திருக்கக்கூடும். ஆனால் எனக்கு 'பத்துப் பாட்டிலே வீரம்' என்ற தலைப்பைத் தந்திருக்கிறார்கள்.

ஏன் என்று நாம் சிந்தித்துப் பார்த்தேன். அப்போதுதான் விளங்கிற்று, பத்துப்பாட்டில் அமைந்திருக்கின்ற வீரத்தின் கூறுகள் தனித்தன்மை வாய்ந் தவை என்று நான் உணர்ந்து கொண்டேன்.

### திருமுருகனின் தீரம்

பத்துப்பாட்டிலே முத்துப் பாட்டான முதல் பாட்டாக அமைந்திருப்பது திருமுரு காற்றுப்படை. நக்கீரருடைய திருமுருகாற்றுப்படை. அந்தத் திருமுருகாற்றுப்படையிலே முருகனுடைய வீரம், அசு ரர்களை அழித்த வீரம் மேலோங்கி நிற்பதைப் பார்க்கிறோம். திருமுருகாற்றுப் படை பேசும் 'வீரவேல், தாரை வேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேல், திருக்கை வேல், வாரிகுளித்த வேல், சூர்மார்பும் குன்றும் துளைத்த வேல் உண்டே துணை" என்று பேசுகின்ற வீரமிகு மாட்சியை நாம் திருமுருகாற்றுப்படையிலே பார்த்திருக்கிறோம்.

முருகனுடைய திருக்கரம் 'செருநர் தேய்த் செல்லுதல் தடக்கை' என்று பகைவர்களைத் தேய்த்து அழித்த மாட்சியைத் திருமுருகாற்றுப்படையிலே பார்த்து இருக்கிறோம்.

> **தலைமையின் கடமை**
>
> ✪ **உலகம் விழித்திருக்கும் சமயம் தலைமை தூங் கினால் கேடில்லை. உலகம் தூங்கும்போது கண்டிப் பாகத் தலைமை விழித் திருக்க வேண்டும்.**
>
> **—யார்க்**

பொருநர்ஆற்றுப்படையிலே கரிகால் வளவனுடைய வீரத் தைப் பேசுகிறபோது அவன், "உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியினுடைய சிறுவன். முருகனைப் போன்ற சீற்றம் உடையவன்" என்ற கருத்திலே 'முருகன் சீற்றத்து உருகெழு குருசில்' என்று பேசப்பட்டிருப் பதைப் பார்க்கிறோம்.

### எழுவர் கொண்ட ஈகைச் செம்முகத்தை தாங்கிய ஒருவன்

அதேபோலச் சிறுபாணாற்றுப் படையிலே ஓய்மாநாட்டு நல்லியக்கோடன் என்பவனைப் பாடுகின்ற புலவர் பேசுகின்ற போது, ஏழு வள்ளல்களையும் வரிசைப்படுத்திச் சொல்லி பேகனை, பாரியை, காரியை, ஆய் அண்டிரனை, அதியமானை, நல்லியை, ஓரியை, இந்த எழுவரையும் சிறப்பித்துப் பேசி, அந்த எழுவர் பூண்ட ஈகை செம்முகத்தை ஒரு முகமாகத் தாங்கி நின்ற பெருமைக் குரியவன் ஓய்மாநாட்டு நல்லியக் கோடன் என்று சிறுபாணாற்றுப் படையில் வீரத்தோடு ஈரத்தை யும் கலந்து பேசுகின்ற மாட்சி மையை நாம் பத்துப்பாட்டிலே பார்க்கின்றோம்.

பெரும்பாணாற்றுப்படையிலே அதுபோலவே, தொண்டமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடு கின்ற நேரத்தில், அவனுடைய ஒப்பற்ற வீரம் எவ்வாறு விளங்குகின்றது என்று சொல்லு கின்ற நேரத்தில், அவனை 'மறவர் மறவன்' என்று சிறப் பித்துப் பேசுகின்ற அழகைப் பார்க்கிறோம்.

அதுபோலவே மதுரைக் காஞ்சியிலே, நெடுநெல்வாடை யிலே என்று வரிசையாக வரக் கூடிய ஒவ்வொரு நூலிலேயும், நாம் வீரத்தினுடைய மாட்சியைப் பார்க்கின்றோம்.

### வான்வீழ்த்தி, வளி மாற்றும் கரிகாலனின் வீரம்

எல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறப்பான முறையில், பட்டினப்பாலையில், காவிரிப் பூம்பட்டினத்தில் தலைவனாகிய கரிகாலன் எப்பேர்ப்பட்ட வீரக் குணம் உடையவன் என்று பேசுகின்றபோது, புலிக்குட்டி கூட்டிலே வளர்ந்ததைப்போல இளமைப்பிராயத்திலே சிறைப் பட்டிருந்த சிறந்த வீரனாகிய கரிகால் வளவன், தான் முன்னெழுந்து இளமைக் காலத்தில் போர் தொடுக்க முற்பட்ட நேரத்தில் மலையை நான் தோண்டி எறிவேன், கடலைத் தூர்த்துவிடுவேன், வானத்தை வீழ்த்துவேன், காற்றைத் திசைமாற்றுவேன்' என்று சொல்லுகிற வீரம் உடையவனாகக் கரிகால்

வளவன் இருந்த செய்தியை 'மலை அகழ்குவனே, கடல் தூர்க்குவனே, வான் வீழ்த்துவனே, வளி மாற்றுவனே' என்று தான் நினைத்தபடி உலகத்திலே செயல்படக்கூடியவன் கரிகால் வளவன் என்று சொல்லிய நேர்த்தியைப் பார்க்கிறோம்.

**விலங்குகளின் வீரம்**

'மலைபடுகடாம்' என்ற கூத்தர் ஆற்றுப்படையிலே மனிதனுடைய வீரத்தைக் காட்டிலும் விலங்குகளுடைய வீரம்கூட ஒப்பற்றதாக விளங்கியது என்பதைக் காட்டுகின்ற வகையிலே, மலைகளின் ஓரத்தில் காணப்படுகின்ற பல்வேறு மாட்சிமை மிகுந்த காட்சிகளை வர்ணித்துக் கொண்டு போகின்றபோது, இரு நிலங்களைச் சேர்ந்த விலங்குகள் போரிடுகின்ற காட்சியைப் புலவர் சொல்லுவார். குறிஞ்சி நிலத்திலே இருக்கக்கூடிய எருதும், முல்லை நிலத்திலே இருக்கக்கூடிய ஆண் மானும் மோதிக்கொள்கின்றன. அந்த இரண்டு விலங்குகள் போரிடுகின்ற ஆற்றலை அவர் எடுத்துப் பேசுவார்.

**வீரத்தின் உச்சி**

இவ்வாறெல்லாம் பத்துப் பாட்டினுடைய ஒவ்வொரு வரியிலேயும் வீரம் பளிச்சிடுகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். அப்படியானால் இந்த பத்துப்பாட்டு நூலிலே காணப்படுகின்ற வீரத்தினுடைய உச்சி எது என்று கேட்டீர்களானால், வீரத்தினுடைய உச்சியாகப் பேசப்படுகின்ற சிறப்பை மிக அருமையாக மதுரைக் காஞ்சியிலே புலப்படுத்திக் காட்டியிருக்கின்றார், மிகச் சிறப்பான முறையிலே மாங்குடி மருதனார்.

**எழுவரை வென்ற கெழுதகை மாட்சி**

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற அந்த மகத்தான போர் வீரனைப்பற்றி வர்ணிக்கக்கூடிய மதுரைக்காஞ்சியில், மாங்குடி மருதனார் அவன் பெற்ற வெற்றிகளை எல்லாம் சொல்லி, சேரனை, சோழனை, திதியனை, எழினியை, எருமையூரனை, இருங்கோவேள்மானை, பொருனனை என்று இந்த எழுவரையும் வென்ற மாட்சிமையை எல்லாம் சொல்லுகிறார். அவனுடைய சிறப்புகளை எல்லாம் அடுக்கி அடுக்கிச் சொல்லிவிட்டு, கடைசியிலே அந்தப் புலவர் சொல்வார்:

"அன்னாய் நின்னொடு முன்னிலை

எவனோ, பொன்னொன்று
கிளக்குவன் அடுபோர் அண்ணல்

கேட்டிசின் வாழி கெடுகநின்
அவலம்"

என்று பேசுகின்ற அந்த மூன்று வரியிலே, எத்தனை வெற்றிகளை நீ பெற்றாலும், எத்தனை வாள் முனையிலே ரத்தத் துளிகளை நீ சிந்தியிருந்தபோதிலும்கூட அவை எல்லாம் உனது ஆற்றலுக்குப் பெருமை சேர்ப்பன அல்ல; 'ஐம்பொறிகள் நுகர்வனவாய் முன்னிற்பன, உன்னோடு என்ன உறவுண்டு' என்று கேட்கின்ற போது, உலகத்தினுடைய பொருட்களினுடைய தன்மைகளிலே நிலையாமை எப்படி மிகவும் மேம்பட்டிருக்கிறது என்பதைக் காஞ்சித் திணையிலே எடுத்துச் சொல்லி, அந்த நிலையிலே வீரம் ஓர் எல்லையை அடைகிறது என்று சுட்டிக்காட்டுகின்ற சிறப்பைப் பார்க்கின்றோம்.

**தோல்வியின் தோல்வி!**

☆ இளமை பருவத்தின் அகராதியில் தோல்வி என்ற சொல்லுக்கு இடமே கிடையாது.

—லிட்டன்

**உண்மையான வெற்றி**

அதனுடைய அடையாளமாகத்தான் பத்துப்பாட்டிலே திருமுருகாற்றுப்படை முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தையே எத்தனை வெற்றிகள் பெற்றாலும், எத்தனை மேலோங்கிய போர்க்களங்களைக் கண்டாலும் உண்மை வெற்றி என்பது மனதை வெற்றி கொள்வதுதான் என்று குறிப்பிட்டு ஔவையார் பேசினார். 'ஒன்றாகக்' காண்பதே காட்சி, புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' என்று.

**முருகப் பெருமானைக் காண முன்செல்லும் பேறு பெற்றார்**

எவன் ஐம்புலன்களையும் வெல்லுகிறானோ, அவனே வீரத்தில் சிறந்தவன் என்று பேசுகிறார். அப்படி மனத்தை அடக்கி ஆண்டு வெல்லுகிற வீரம் இருக்கிறதே, அதனுடைய மாட்சிமையைச் சொல்லுகின்ற

காரணத்தால்தான் திருமுருகாற்றுப்படையிலே முதன்மையான ஒரு கருத்தை வைத்தார்.

அறுபடை வீடுகளுடைய அழகுகளைச்சொல்லிக்கொண்டு வருகின்ற நேரத்தில் அந்த அறுபடை வீடுகளில் ஒன்றாக இன்று நாம் 'பழனி' என்று சொல்லுகின்ற திருவாவினன் குடியை வர்ணிப்பார். அந்தத் திருவாவினன்குடி என்ற திருத் தளத்தில் காணுகின்ற ஒரு சிறப்பான காட்சி என்னவென்றால், முருகப்பெருமானைக் காண்பதற்காகப் பலரும் வருகிறார்கள். யார் யார் வருகிறார்கள் என்றால் கருடக் கொடியை உயர்த்திய திருமால் வருகின்றார்; வெள்ளேற்றுக் கொடியை உயர்த்தியிருக்கிற சிவபெருமான் வருகின்றார்; ஆயிரம் கண்ணாகிய இந்திரன்; வருகின்றான்; தேவாதி தேவர்கள் எல்லாம் வருகிறார்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள் வருகிறார்கள்; தேவர்கள், அசுரர்கள், தைத்தியர்கள் என்று சொல்லப் படுகின்ற பதினெட்டுக் கணங்கள் வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் முன்னால் போகின்ற உரிமை யாருக்குத் தரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மர உரியையே உடுத்தி இருக்கக்கூடியவர்களாக, வலம்புரிச் சங்குபோல் தலை நரைத்திருப்பவர்களாக, மாசற இமைக்கும் பேரொளி உருவினராக, எலும்பு தோலாக, பசித்துப் பசித்து எப்போதாவது உணவைப் புசிக்கின்ற காரணத்தினால் எலும்பும் தோலுமாக இருக்கின்ற மேனியர்களாக, பகையையும், கோபத்தையும் நீக்கிய மனத்தினர்களாக, கற்றவர்களும் அறியமுடியாத எல்லையை உடைய பேரறிவு படைத்தவர்களாக, கற்றோர்க்குத் தாம்வரம்பாகிய தலைமையர்களாக, கடும் சினம் நீக்கியவர்களாக, இடும்பையாவதும் அறியா இயல்பினராக விளங்கக்கூடிய, மனத்தை வென்ற சான்றோர்கள் இருக்கிறார்களே!... அவர்கள்தான் இத்தனைத் தெய்வங்களுக்கும் முன்னால் திருவாவினன் குடியிலே முதன்மையாகப் போகின்ற பேறு பெற்றவர்கள் என்று திருமுருகாற்றுப்படையிலே, நக்கீரர் எடுத்துச் சொல்லுகிறார்!.

**பத்துப்பாட்டின் வீரம்**
**பண்பாட்டின் வீரம்**


எனவே, எல்லா வெற்றிகளையும் விட பெரிய வெற்றி, எல்லா வீரத்தையும்விட பெரிய வீரம் என்பது 'ஒன்றாகக் காண்பதே காட்சி, புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்' என்ற அந்த உயர்ந்த கருத்தைத் திருமுருகாற்றுப்படை என்ற அந்த மாணிக்கத்திலே முதன்மையாகப் பதித்து வைத்திருக்கக் கூடிய சீர்மையைப் பத்துப் பாட்டு நமக்கு வழங்குகிறது. அதுதான் பத்துப்பாட்டு நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்ற வீரம், நம்முடைய பண்பாட்டை வளர்க்கக்கூடிய வீரம், மேன்மையான வீரம்! ●

## எயிட்ஸ் ஓர் எச்சரிக்கை!

### —கவிஞர் மயிலை முத்தெழிலன்

நித்தமொரு நோய்வந்தே நாட்டை வாட்டும்
நிலத்திலுள மருத்துவர்க்கே ஆட்டங் காட்டும்!
இத்தரையில் அறிஞரிதை ஓட்டு தற்கே
இரவுபகல் ஆய்ந்தாய்ந்தே மருந்தைக் காண்பர்!
எத்தனையோ நோய்களைநாம் கண்டே யுள்ளோம்
ஏற்றதொரு மருந்தளித்தே ஓட்டி யுள்ளோம்!
கத்துகடல் சூழ்நாட்டைக் கலங்கச் செய்யும்
காமநோயாம் எயிட்சிற்கு மருந்தே இல்லை!

பிறநோய்கள் காற்றாலும் நீரினாலும்
பலபேரைப் பீடிக்கும் ஆட்டி வைக்கும்!
முறைகேடாய் உறவாடும் மனிதர் தம்மை
மடியவைக்கும் கொடுநோயே எயிட்சு நோயாம்!
உறவுகொளும் முறைமினிலே ஒழுங்கிருந்தால்
ஒருவரையும் எயிட்ஸ்அணுகப் போவதில்லை
உறவின்றி நோய்க்குருதி ஏற்ப தாலே
உடன்பற்றும் இந்நோய்தாம் உணரு வீரே!



# மானுடம் பாடும் வானம்பாடி!

டாக்டர் ச.சு. இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்,
சென்னை.

அந்தாதி பார்த்து அந்தாதி, கலம்பகம் பார்த்துக் கலம்பகம், பிள்ளைத்தமிழ் பார்த்துப் பிள்ளைத்தமிழ், பரணி பார்த்துப் பரணி பாடிய புலவர்கள் மத்தியில் ஒரு புதிய திருப்ப மாகப் பாரதி தோன்றினார். தேசியம் என்ற ஒரு வட்டத் திற்குள் நின்றுவிடாமல், சமுதாயக் கொடுமைகளைக் கண்டு கொதித்துப் பாடினார்.

துப்பாக்கி வயிற்றில் பீரங்கிக்குண்டு தோன்றியது போலப் பாரதிக்குப் பிறகு பாரதிதாசன் சாதி மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை வடிவமைக்கக் கவிதையில் வழி காட்டினார். இன உணர்வுக்கும், மொழி உணர்வுக்கும் பாட்டுப் பாதையில் புத்துணர்ச்சி ஊட்டினார்.

அவருடைய மாணவர்களில் ஒருவராகக் கவிதை உலகில் தோன்றியவர் 'அக்கினிக்குஞ்சு' பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார். பாவேந்தரின் உதவி யாளராகப் பணியாற்றிய பட்டுக் கோட்டையார், அவருடைய தலைமையிலேயே திருமணம் செய்து கொண்டார். இன்று பலர் எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது போல் அல்லாமல் பட்டுக்கோட்டையார் பாடல் எழுதும் முன் "பாரதிதாசன் வாழ்க" என்று எழுதிவிட்டுத் தொடங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அந்த அளவிற்குப் பாவேந்தரின் மீது பற்றுக் கொண்டவர் பட்டுக் கோட்டையார்.

திரைப்படங்களில் இடம் பெற்ற பக்திப் பாடல்களுக்கு ஒரு புதுவடிவம் தந்தவர் பாபநாசம் சிவன். சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைத் திரைஇசைப் பாடல்களில் எடுத் துரைப்பதில் முன்னணிக் கவிஞராகத் திகழ்ந்தவர் உடுமலை நாராயணகவி. அவருக்குப் பின்னர் பட்டுக் கோட்டையார் தேரோடும் வீதியில் மன்னவன் வருவான் எனக் காத்திருந்த காலத்திற்கு ஒரு முடிவு கட்டிவிட்டுப் பொது உடைமைக் கோட்பாடுகளை ஏழை, எளிய மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் திரைப் படப் பாடல்கள் வாயிலாக வழங்கினார். தமிழ்த் திரைப் படப் பாடல்கள் வரலாற்றில் பட்டுக்கோட்டையின் இடம் தனித் தன்மை வாய்ந்த சிறப்புக் குரியது.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் - நினைவு நாள்: அக்டோபர் - 8**

**"இவருடைய பாடல்கள் இசைப் பாடல்களாகவே வெளி வந்துள்ளன. அதிலும், பெரும் பாலும் கிராமியப் பண்பையும், பண்ணையும் தழுவி வெளி வந்துள்ளன. உருவங்களைக் காட்டாமல் உணர்ச்சிகளைக் காட்டுகிறார். கிராமத்துச் சாதாரண மனிதனின் மொழியில் பேசுகிறார். பாடல்கள் எளிய நடையில் இருந்தாலும், கருத் தாலும் அவை ஆழமாக இருக் கின்றன. இருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். பொது வாகக் கவிதைகள் சிந்தைக் கினியனவாக, வாழ்வுக்கு வள மூட்டுவனவாக இருக்கின்றன"** என்று தவதிரு குன்றக்குடி அடிகளார் பட்டுக்கோட்டை யாரின் பாட்டுச் சிறப்பைச் சுட்டிக் காட்டுவது இவண் குறிப்பிடத்தக்கது.

"தேனாறு பாயுது செங்கதிர் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது
மானே இந்த நாட்டில் வகையான
மாறுதல்
வந்தாலன்றி ஏது நீதிகள்?"
(படித்தபெண் - படம்)

என்று பாடுபடும் பாட்டாளி மக்கள் தங்கள் நிலையைப் பற்றிச் சிந்திக்கவும், அந்த நிலையை மாற்றிச் செயல்படத் தூண்டும் வகையிலும் பாடியது அவருக்கே உரிய சிறப்பாகும். அறிவுடைய மக்களாக வாழ வேண்டும் எனில், மூட நம்பிக் கைகளை அகற்ற வேண்டும்; தன்னம்பிக்கையுடனும், தன் மான உணர்ச்சியுடனும், வாழ வேண்டும் என்பதைத் தனக்கே உரிய பாங்கில்,

வேப்ப மர உச்சியில் நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க

என ஒரு சிறு குழந்தையும் புரிந்து கொள்ளும் வகையில் பாடலை இயற்றியுள்ளார்.

மாறுகின்ற காலத்திற்கேற்ப, மொழி உட்பட பல துறைகளில் ஒரு புதிய மாறுதலைக் கொண்டு வர முயலவேண்டும் என்பதைத்

"தூங்காது! கண் தூங்காது
இருள் சூழும் உலகில்
பொது வாழ்வு தோன்றும் வரை
தூங்காது கண் தூங்காது"
(கற்புக்கரசி 1957)

என்று வெகு எளிமை யாகவும், கருத்து மக்கள் மனதில் பதியும் வகையிலும் பாடியவர். எல்லாம் தலைவிதி என்று துன்பத்தைச் சகித்துக் கொள்ளுகின்ற மனப்போக்கை மாற்றி விதியை மதியால் வெல்ல வேண்டும் என்ற கருத்துடன்,

"தனியுடைமைக் கொடுமைகள்
தீரத் தொண்டு செய்யடா"

என்று பாடலில் எடுத் துரைத்தார்.

வேட்டுச் சத்தம் கேட்டும் விழிக்காத தமிழ் மக்களைப் பாட்டுச் சத்தத்தால் விழிக்கச் செய்யும் பாங்குடன்,

'நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக்கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன்
தானுங்கெட்டார். சிலர்
அல்லும் பகலும்
தெருக் கல்லாயிருந்துவிட்டு
அதிர்ஷ்டமில்லையென்று
அலட்டிக்கொண்டார்"

**★விவேகம் மனிதனை அடிமைத் தனத்திலிருந்து விடுதலை செய்கிறது.**

**- எமர்சன்**

என்று தமிழ் மண்ணில் வாழும் மக்கள் விதியை நம்பித் தெருக் கற்களைப்போல் இருந்து விடக் கூடாது என்று எச்சரித்து விட்டுப் போயிருக்கிறார்.

செல்வந்தர் - ஏழை; ஆண் - பெண் - மேல்சாதி; கீழ்சாதி ஆண்டான் - அடிமை; படித்தவர் - படிக்காதவர் என்று பல மேடுபள்ளங்களைக் கொண்ட இச் சமுதாயத்திற்குத் தனது பாடல்கள் வாயிலாக நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியவர். இக் கோட்பாட்டில் இறுதி மூச்சு வரை இடையறாது பணி யாற்றியவர் பட்டுக்கோட்டையார். இலட்சங்களுக்கு விலை போகாமல் இலட்சியக் கவிஞராக அவர் வாழ்ந்து காட்டியதால் தான், 'மக்கள் கவிஞர்' என்று சிறப்புப் பெயர் பெற்றார். "மாட மாளிகைகளில் வாழும் சுதந்திரமே! நீ எப்போது ஏழைக் குடிசைக்கு வருவாய்? அப்போதுதான் சுதந்திரம் என்ற உன்பெயர் பொருந்தும்" என மேலைநாட்டுக் கவிஞர் பாடி யுள்ளதைப் போல் சுதந்திரம் என்பது ஏழை குடிசைக்கும் வர வேண்டும் என்று பட்டுக் கோட்டையார் விரும்பினார்.

'நாட்டு நிலைமையை நல்லாப்
பாத்து
ஏற்றத் தாழ்வை ஒழிக்க வரப்பில்
போட்டது துளையைப் புரட்சி
நண்டு'

எனப் புரட்சிக் குரலெடுத்துக் கொடுத்திருக்கிறார்.

இன்றைய மனித சமூக அமைப்பில் போட்டிகளும் பொறாமைகளும் மலிந்து காணப்படுகின்றன. மேலும் செல்வந்தர்கள் எல்லாவற்றை யும் தங்கள் உடைமைப் பொருள் களாக ஆக்க முயல்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களின் இழிந்த நிலையைப் பற்றி அவர்கள் எண்ணிப் பார்ப்பதே இல்லை. அத்தகைய தீயவர்கள் எண்ணிப் பார்த்துத் திருந்துவதற் காகவும் இவ்வாறு ஏழைகளின் குருதியை, அட்டைகளைப் போன்று உறிஞ்சும் செல்வந்தர்கள் ஒவ்வொருவருக்கும் எட்டு அடி நிலம்தான் இறுதியில் சொந்தம் என்பதை நினைவூட்டுவதற் காகவே பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்:

'குள்ளநரி மாட்டிக்கிட்டா
கொறவனுக்குச் சொந்தம்
தட்டுக்கெட்ட மனிதர்கண்ணில்
பட்டதெல்லாம் சொந்தம்
சட்டப்படி பார்க்கப்போனால்
எட்டடிதான் சொந்தம்!

எல்லோரும் புரிந்துகொள்ளு கின்ற வகையில் உவமைகளை அடுக்கிக்காட்டிக் 'கொற வனுக்குச் சொந்தம்' எனும் இப்பாடலைச் சிறப்பாகப் பட்டுக்கோட்டையார் அமைத் துள்ளார்.

உவமைகளைப் புதுமையாகச் சொல்வதுடன், அவற்றை ஏழை மக்கள் எளிதில் உணர்ந்து கொள்ளவும் பாடுவது பட்டுக் கோட்டையாரின் பாடற் பண்பு.

'கதிராடும் கழனியில்
சதிராடும் பெண்மணி
கலைமேவும் அழகாலே
கவர்ந்தாய் கண்மணி
முதிராத செடியே
முல்லை மலர்க் கொடியே'

என்று காதற் பாடல்களில் கவின்மிகு உவமைகளை எடுத் தாளுகிறார்.

காதலர்கள் ஒருவரோடு ஒருவர் பிரியாமல் இணைந் திருப்பதை 'ஈருயிர் ஒருடல்' என்று பொதுவாகக் குறிப் பிடுவர். சங்க காலச் சான் றோர்கள் முதல் பாரதிதாசன் வரை இப்பிரியா வாழ்க்கை யைக் குறித்து பலவகையான உவமைகளைப் பெய்துள்ளனர். ஆயின் பட்டுக்கோட்டையார் உவமை புதுமையாகவும் சமூகப் பார்வையுள்ளதாகவும் அமைந் துள்ளது.

காதலர் இருவர் ஒன்றுபட்டு இருப்பதை 'உழவனும் ஓயாத உழைப்பும் போல் நாமே ஒன்றுபட்டு வாழ்க்கையில் என்றுமிருப்போம்' என்று உழவனும் அவன் உழைப்பும் போல் காதலர் இருவர் ஒன்று பட்டு இருந்தனர் எனக் குறிப் பிடுவது இங்குச் சுட்டத்தக்கது.

ஆலை அதிபர்களின் செல்வப் பெருக்குக்குக் கால்கோளாக அமைவது தொழிலாளர்கள் உழைப்பாகும். பிறரை வாழ வைக்கின்ற அவர்களுடைய வாழ்க்கையோ இரங்கத்தக்கதாக உள்ளது. குடிப்பதற்குக் கூழ் இன்றிக் கந்தை ஆடையை உடுத்திக் குடிசையில் குந்திக் கிடக்கின்ற இவர்களுடைய வாழ்விற்கு இன்னும் விடிவு பிறக்கவில்லை. எனவே, அவர்கள் 'செக்கில் இட்ட தேங்காய் போல்' துயருறுவ தாகப் பட்டுக்கோட்டையார் பாடியுள்ளார்.

> ☆ பரஸ்பர நம்பிக்கை, நன்ன டத்தை, நல்லொழுக்கம் ஆகியவையே வெற்றிக்கான வழிகளாகும்.
>
> —மூதறிஞர் இராஜாஜி

ஆதிக்க சக்தியை எதிர்த்து மக்கள் கொதித்து எழுவதை 'வெடித்த குண்டாய் கிளம்பு கின்ற பொறிகள்' என்று பொருள் பொதிந்த உவமை வழி வெளிப்படுத்துகிறார்.

கவிஞர்கள் பாடல்களில் கருத்துகளை ஏற்றிக் கூறுவதைத் தற்குறிப்பேற்றணி என்று கூறுவர். பட்டுக்கோட்டையார் இவ்வணியைச் சிறப்பாகப் பல விடங்களில் பயன்படுத்தி யுள்ளார். எடுத்துக்காட்டுக்கு ஒன்று—

கழனியில் வானத்தை நோக்கி நிமிர்ந்து நின்ற பயிர் களைப் பார்த்த பட்டுக் கோட்டையார் 'உழைப்பவர் பலனை ஒட்ட உருஞ்சி ஒதுங்கிப் பதுங்கும் உல்லாச மனிதரின் துணிவையும் கருங்காலிச் செயலையும் கொல்லும் ஈட்டி போல் குருத்துகள் நின்றன' என்று பாடியுள்ளார்.

உழவர்களின் உழைப்பை உறிஞ்சி வாழும் நிலவுடைமை யாளர்களின் கொடுஞ்செயல் களை எதிர்க்கும் ஈட்டிகளைப் போன்று பயிர்கள் நின்றன என்று பட்டுக்கோட்டையார் தன் கருத்துகளை இங்கு ஏற்றிக் கூறியுள்ளார்.

அவர் காலத்தில் வெளிவந்த தமிழ் இதழ்கள் பலவற்றில் பிற மொழிச் சொற்கள் மிகுதியாக

இடம்பெற்றிருந்தன. இதைக் கண்டு வெகுண்ட பட்டுக் கோட்டையார், "தமிழ்நாட்டில் நடத்தப்படும் பத்திரிகைகள் தமிழ்ச் சொற்களைக் கையாள வேண்டும் என்று விரும்பினார். தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் 'தமிழ் மணம்' பரப்ப வேண்டும் என்பது பட்டுக்கோட்டையாரின் வேட்கை. மேலும், தமிழ் இதழ்களில் பொய்மை படர்ந்து கிடக்கும் நிலத்தினில் உண்மை களை விதைக்கவும், ஒளி பொங்கிவரும் கதிர்போல மக்கள் விழிக்கவும் பாடுபட வேண்டும் என்று நெறிப் படுத்தியுள்ளார்.

"தமிழ் - என் தாய்
தமிழ் - என் துணைவி
தமிழ் - என் மகள்
இயல் - என் தாய்
இசை - என் துணைவி
நாடகம் - என் மகள்"

என்ற கவிதை வரிகள் அவருடைய தமிழுணர்வுக்குத் தெளிந்த சான்றாகும்.

இவ்வாறு 'தமிழே தன் குடும்பம்' என்று கருதி வாழ்ந் தவர் பட்டுக்கோட்டையார் எனில் மிகையாகாது.

"நாங்க பொறந்த தமிழ்நாடு - இது
நாலு மொழிகளின் தாய்வீடு!
ஓங்கி வளரும் கலையைத்
தலையிலே
தாங்கி வளரும் திருநாடு
அன்று
எதிர்ப்படை யெழுந்து
பற்றி மிகச் சினந்து
இமயச்சரிவில் வந்த போதிலே
வெற்றி
எமக்கென்றே முழங்கிற்று காதிலே".

எனத் தமிழகத்தின் சிறப்பைப் பாடிய கவிஞரின் வரிகள், தமிழர் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டியதாகும்.

உழைப்பின் உயர்வைத் தனது ஒவ்வொரு பாடலிலும் எடுத்துக் காட்டியவர்.

"சாமிக்குத் தெரியும், பூமிக்குத்
தெரியும்
ஏழைகள் நிலைமை - அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை'

என்று செய்யும் தொழிலே தெய்வம் என்ற கருத்துடன் தெய்வத்துக்கும் மேலாக உழைப்பின் உயர்வைத் துணி வாகப் பாடலில் எடுத்துக் கூறியவர். இதைப் போன்றே பெண்ணடிமைத் தனத்தையும் சாடிப் பாடியுள்ளார்.

இந்திய மக்களைச் சாதியோ, சமயமோ பிரிக்க முடியாது என்ற கருத்துடையவர் பட்டுக் கோட்டையார். இந்து, முஸ்லீம் என்று சமயத்தின் அடிப்படை யில் மக்களைப் பிரிப்பது ஒற்றுமையுணர்வைப் பலவகைப் படுத்திவிடும். எனவே இந்து, முஸ்லீம், கிறித்தவர்கள், சீக் கியர்கள் இன்ன பிற சமயத்தார் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை பட்டுக் கோட்டையார் ஏற்றிப் போற்றினார்.

இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக அவர் எழுதிய கதைப் பாடல் 'இராஜாதேசிங்கு' ஆகும். ஒரு வரலாற்று நிகழ்வை இந்து முஸ்லீம் ஒற்றுமை வளரப் பயன்படுத்தியுள்ளார்.

தமிழ்த் திரைப்படக் கவிஞர்களுள் இதுவரை யாரும் எடுத்துக் கூறத் தயங்கிய பல புதிய கருத்துக்களைத் துணி வுடன் எடுத்துக் காட்டித் திரைப்படப் பாடல்களின் உள்ளடக்கத்திற்குப் புதிய உத்தி முறையைத் தந்தார். வாழ்வில் அவர் பெற்ற பல்வேறு அனுபவங்களைக் கவிதைகளாய் வடித்தெடுத்த பட்டுக் கோட்டையார் தமிழ்த் திரைப் படப் பாடல்கள் வரலாற்றில் ஒரு புதிய கால கட்டத்தை உருவாக்கியவர் எனலாம்.

"உணர்ச்சியோடு, உற்சாகத் தோடு பாடவேண்டும். பாடிய பின் எழுத வேண்டும்: இப்படி எழுதும் பாடல்கள் எக்காலத் திலும் சாகாது" என்று பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாட்டுக்கு வகுத்த இலக்கணத் திற்கு ஏற்ப அவருடைய பாடல்கள் சாகாவரம் பெற்றவை என்பது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை!

**★ காலம் உறுதியான நண்பனா கவும் இருக்கிறது. அதே சமயம் கருணையற்ற பகை வனாகவும் இருக்கிறது.**

**—அண்ணல் காந்தியடிகள்**

**★ வாழ்க்கையில் நாம் முன்னேற முன்னேறத்தான் நம் திறமைகளின் வரம்பு களைத் தெரிந்து கொள் கிறோம்.**

**—சாக்ரட்டீஸ்**

**★ கஷ்டங்களை நாம் அனுப வித்தால்தான் பின்னர் நாம் சுகத்தின் அருமை தெரிந்து நடந்து கொள்ள முடியும்.**

**—மூதறிஞர் இராஜாஜி**



# திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் காயிதெ மில்லத் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

**க**ண்ணியத் தென்றல் காயிதெ மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 30.9.95 அன்று, திண்டுக்கல் பேகம்பூர் "ஹஜ்ரத் அமீருன்னிசா பேகம் ஓரியண்டல் நடுநிலைப் பள்ளி'' வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு முன்னதாக, விழா மேடையின் அருகே அமைக்கப்பட்ட கண்ணியமிக்க காயிதெ மில்லத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புகைப் படக் கண்காட்சியை, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு எஸ். காந்திராஜன் அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை வகித்தார்.

திண்டுக்கல் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரையாற்றினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு எஸ் காந்திராஜன் அவர்கள் கண்ணியத் தென்றல் காயிதெ மில்லத் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, தமிழக அரசு காயிதெ மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா கொண்டாடுவது பற்றியும், அன்னாரின் வாழ்க்கை வரலாற்றையும், தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் அவர் செய்த தியாகத்தையும் எடுத்துக் கூறினார்.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமைத் தாங்கிப் பேசியதாவது:

"தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவின் பேரில் காயிதெ மில்லத் பிறந்தநாள் விழா கோலாகலமாக மாவட்டந் தோறும் கொண்டாடி வரு



கிறோம். இந்த நூற்றாண்டு விழாவை ஓராண்டு நடத்த உத்தரவிட்டுள்ளார். அவரது விழாவை யாராலும் கொண்டாட முடியாத அளவுக்குக் கொண்டாட வேண்டும் எனப் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார். யார் இந்த மண்ணுக்காகப் பாடுபட்டாரோ, யார் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டாரோ, அந்தப் புகழுக்கு உரியவரை நாம் பாராட்ட வேண்டும். காயிதெ மில்லத் மறைந்த பின்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். மண்ணில் பிறந்தவர்களுக்கு மரணம் நிச்சயம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மடியத்தான் வேண்டும். தண்ணீரில் பிறந்த உப்புக்குத் தண்ணீரில் தான் மரணம். பைசா கோபுரம் எப்படிச் சாய்ந்தும் சாயாமல் உள்ளதோ, அதுபோல காயிதெ மில்லத் அவர்கள் மறைந்தும் மக்கள் மனதில் மறையாமல் இருக்கிறார்".

விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசியதாவது:

"காயிதெ மில்லத் அவர்கள் நூற்றாண்டு விழா கொண்டாட, புரட்சித்தலைவி உத்தரவிட்டதாலும், காயிதே மில்லத் அவர்கள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டமான என் மாவட்டத்தில் பிறந்ததாலும் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டில் இதுவரை 10 முதல் அமைச்சர்கள் பதவியில் இருந்து வந்துள்ளனர். அதில் 3 முதல் அமைச்சர்கள் சமுதாயத்தைப் பார்த்தனர். பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த தினத்தை அரசு விடுமுறை நாளாக அறிவித்தார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மசூதிகளில் பணிபுரியும் உலமாக்களுக்குப் பென்சன் வழங்க உத்தரவிட்டார். புரட்சித் தலைவி அவர்கள் வக்ப் வாரியத்திற்கு ரூ.1 கோடி நிதி தந்தார். மேலும், வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூ.30 இலட்சம் நிதி தருவதாகக் கூறி, முதல் கட்டமாக ரூ.1 கோடியே 30 இலட்சம் தந்துள்ளார். முஸ்லீம் சமுதாயம் அவருக்கு நன்றிகூறக் கடன்பட்டுள்ளது".

விழாவில், தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலத் தலைவர் திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது, திருமதி ஜீனத்சர்புதீன், எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரையாற்றினர். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. சீனிவாசன், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ர. நிர்மலாதேவி ஆகியோர் முன்னிலை உரையாற்றினர். திரு ப. குமாரசாமி, எம்.பி, திரு எஸ்.எம். துரை, எம்.எல்.ஏ., திரு ஏ.டி.செல்லச்சாமி, எம்.எல்.ஏ., திரு ஆ. சுப்புரத்தினம், எம்.எல்.ஏ., பால்வளத் தலைவர் திரு வி.ஆர். இராஜாங்கம், மற்றும் திரு இசட் ஜபருல்லா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விழா முடிவில், திண்டுக்கல் அண்ணா மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு எம். அண்ணாமலை நன்றி கூறினார்.

## இங்கர்சாலின் இனிய மொழிகள்

* **உங்களுக்கு எந்தெந்த உரிமைகள் தேவையென்று கருதுகிறீர்களோ அந்த உரிமைகளை மற்றவர்களுக்கும் அளியுங்கள்.**

* **மனிதனின் அதிர்ஷ்டம் அவன் தலைவிதியில் இல்லை. அவன் நடத்தையில்தான் இருக்கிறது.**

* **படித்தவன் சிந்திக்கிறான், சிந்திக்கிறவன் முன்னேறுகிறான்.**

* **உண்மை மனிதனை நாகரிகமானவனாகப் பரிசுத்தமானவனாக மாற்றி அவனுக்குத் தைரியம் அளிக்கிறது.**

# தமிழ் எங்கள் உயிர்!

**—செல்வி ப. காயத்ரி**

தமிழாய்ந்த சான்றோர்களே, தேமதுரத் தமிழோசை கேட்கத் தஞ்சைக்கு வந்திருக்கும் எம் அருமைத் தமிழ் அன்பர்களே! வணக்கம்.

தமிழ் மிகச் சிறந்த மொழி என்ற கருத்து அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய டாக்டர் கால்டுவெல் தமிழின் தொன்மையை, தமிழின் மேன்மையை தமிழின் இலக்கணப் பெருமையை, தமிழின் இலக்கணத் தூய்மையை உலகம் அறியச் செய்தார்.

தமிழின்பால் காதல் கொண்ட போப் பாதிரியார் திருக்குறளால் ஈர்க்கப்பட்டு, திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்து அதன் அருமை பெருமைகளை உலகம் உணரச் செய்தார்.

சங்க இலக்கியங்களைப் படிப்போர் தமிழால் முடியும் என்ற கருத்தை ஒப்புக்கொள்ளத் தயங்குவதில்லை. பத்துப் பாட்டையும், எட்டுத்தொகையையும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும், எழுத்தெண்ணிப் படிக்கின்ற புலவர் பெருமக்கள், அவற்றில் இல்லாத அறிவியல் துறை கருத்துக்கள், கலைத் துறைக் கருத்துக்கள் எதுவுமே இல்லையெனப் பாராட்டிப் பேசுவதைப் பார்க்கின்றோம்.

தமிழைவிட வயதில் இளைய மொழியான ஜப்பானிய மொழியில் அறிவியல் துறைக் கருத்துக்களைக் கூறுகிறார்கள். தமிழைவிட வயதில் இளைய மொழியான ரஷ்ய மொழியிலும் அறிவியல் துறை கருத்துக்களைக் கூறுகிறார்கள். ஜப்பானிய மொழியிலும், ரஷ்ய மொழியிலும் எந்தத் துறை கருத்துக்களையும் கூற இயலும் என்ற உண்மையைப் பார்க்கின்றோம்.

இந்த மொழிகளை எல்லாம் விட பண்பட்ட மொழி, தொன்மை மிகுந்த மொழி நம் தமிழ் மொழி. இந்த மொழிகள் தோன்றாத காலத்திற்கு முன்பே தமிழ் தோன்றி உலகை ஆண்டு வந்திருக்கிறது. கல்வெட்டு கண்ட மொழி தமிழ் மொழி. காகிதமும், அச்சு எழுத்தும் தோன்றாத நாளிலிருந்து பனை ஓலையில் படியெடுக்கப்பட்ட பெருமை தமிழ் மொழிக்கு உண்டு.

## சித்தர் பாடல்கள்


மருத்துவமும், மருந்தியலும் தமிழால் முடியாது என்றா நினைக்கிறீர்கள்?

சித்தர் பாடல்கள் உங்களுக்குத் தெரியாதா? சித்த மருத்துவம் தமிழ்நாட்டில் காலங்காலமாகக் குடும்ப மருத்துவ முறையாக இருந்து வந்திருக்கிறது. சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவம்தானே!

பட்டிதொட்டிகளில் எல்லாம் பதுங்கிக் கிடந்த தமிழ் மருத்துவ நூல்களைத் தேடித் திரட்டி, தஞ்சையை அரசாண்ட சரபோஜி 'சரபேந்திர வைத்திய முறைகள்' என்று பெயரிலான நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். கரையான்களுக்கும், கரப்பான்களுக்கும் இரையாக இருந்த தமிழ் மருத்துவ நூல்களைப் படித்துப் பார்த்து அவற்றை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொண்டே சரபேந்திரர் தன்னுடைய மருத்துவ முறைகளைத் தமிழ் அன்னைக்குப் படைத்தார்.

## தமிழன்னைக்குக் காணிக்கை

சத்திரங்களும், சாவடிகளும் கட்டிய சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில், சரித்திரம் காணாத அளவுக்குத் தானங்களும் தருமங்களும் செய்த சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில், ஆரோக்கியச் சாலைகளையும், ஆங்கிலக் கலாசாலைகளையும் நிறுவிய சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில்- சரஸ்வதி மகால் ஒன்றை அமைத்து ஆய கலைகள் அறுபத்து நான்கும் வளர்த்த சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில்- இன்று



ஆசிரியர்கள் முதலில் மாணவர்களுக்குச் சுய மரியாதை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். மானம், ஆண்மை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். சமத்துவத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். மக்களிடத்தில் அன்பு செலுத்தக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

—தந்தை பெரியார்

உலகமே கண்டு வியக்கும் அளவுக்கு உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறது என்று சொன்னால் அது, எங்கள் தமிழ்ச் செல்வி புரட்சித்தலைவி தமிழ் அன்னைக்குச் செலுத்தும் காணிக்கையாகும்.

**ஆங்கில மோகம்**

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி தொடங்கிய நாளிலிருந்து இந்த நாடு ஆங்கிலத்திற்கு அடிமையாயிற்று.

டி.பி. மெக்காலே போன்ற மேல்நாட்டு அறிஞர்கள் ஆங்கிலத்தின் வழி மட்டுமே அறிவு வளரும், ஆங்கிலத்தின் வழிமட்டுமே அறிவு பெருகும் என்று கூறியதை நம் முன்னோர் வேத வாக்காக ஏற்று ஆங்கிலத்தின்பால் மோகம் கொண்டனர்.

தமிழிலே எழுதுவது, தமிழிலே பேசுவது, தமிழிலே எண்ணுவது கூட 200 ஆண்டுகளாகத் தடைபட்டுப் போயிற்று.

பாரதியார், பாரதிதாசன் போன்ற அறிஞர்களின் கவிதைகளாலும், மறைமலையடிகளார், திரு.வி.க. போன்ற அறிஞர்களின் உரைநடைகளாலும் விழிப்புணர்ச்சி பெற்ற தமிழ் இனம், இன்றைக்குத் தமிழால் முடியும் என்ற கருத்தை உலகம் உணரச் செய்து வருகின்றது. வரலாறு, பொருளியல், புவியியல், அரசியல் போன்ற மானிடயியல் தொடர்பான கருத்துக்களாக இருந்தாலும், வேதியல், உயிரியல், இயற்பியல் போன்ற அறிவியல் தொடர்பான கருத்துக்களாக இருந்தாலும், தமிழால் தெரிவிக்க முடியும் என்ற நிலைமையைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

உங்களில் எத்தனைப்பேர் 'கலைக்கதிர்' என்ற மாத இதழைப் படிக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. மின்னல் வேகத்தில் வளர்ந்துவரும் மின்னியலிலிருந்து எல்லா அறிவியல் கருத்துக்களையும், தெளிவாகத் தமிழில் அதிகம் படிக்காத பாமரர்கூட புரிந்து கொள்ளும் வகையில் கலைக்கதிர், கட்டுரைகள் தமிழையும், அறிவியலையும் பாங்கோடு வளர்ப்பது பாராட்டுக்குரியது.

பலருக்குத் தெரியாத ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைக் கூறி, நாளும் தமிழ்வளர்க்கும் பணியில் மாத இதழ் 'கலைக்கதிர்' ஈடுபட்டிருப்பதை இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

**இசையும் தமிழும்**

அரசு ஆணைகளைத் தமிழில் வெளியிட முடியும். சட்டங்களைத் தமிழில் இயற்ற முடியும். அரசியல் அமைப்பினைத் தமிழில் செய்ய முடியும். தொலை தூரத் தந்தியைக்கூட தமிழில் அனுப்ப முடியும்.

அதுமட்டுமல்ல; கணிப்பொறியைக்கூட தமிழுக்கு அடிமையாக்க முடியும் என்ற உண்மைகளை மெய்ப்பிக்கிற மாத இதழ் 'செந்தமிழ்ச் செல்வி ஆகும். இசையிலும் நாட்டியத்திலும்கூட தமிழால் முடியும் என்பதைப் பல்லவர் காலச் செப்பேடுகளும், கல்வெட்டுகளும், தெரிவிக்கின்றன.

கர்நாடக சங்கீதத்தின் வேராகவும், விழுதாகவும் கருதப்படுகின்ற ஏழு சுரங்களையும் தமிழ்தான் முதலில் தந்தது என்பதைத் தெரிவிக்கின்றன. புதுக்கோட்டைப்பகுதியில் உள்ள இசைக் கல்வெட்டுகள் இன்று கர்நாடக சங்கீதத்தின் வேராகக் கருதப்படுகிற ஏழு சுரங்களையும் தந்தது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

'மாதவிப் பொன்மயிலாள் தோகை விரித்தாள் என்ற செய்தியைச் சொல்லும் இளங்கோ, நாட்டியக் கலையின் பிறப்பிடமே தமிழகம்தான் என்பதை உணர்த்துகிறார்.

இன்றைக்கு நாம் அராபிய எண்கள் என்று அழைக்கின்ற ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள் தமிழ் எண்கள்தான் என்கிற செய்தி உங்களுக்குத் தெரியுமா? தமிழகத்தில் தோன்றிய எண்களை அராபியர்கள் கற்று, இன்று உலகத்தின் ஏழு கண்டங்களிலும் எழுதப்படுகின்ற அளவுக்கு அது பரவியிருக்கிறது. கணக்கியலின் அடிப்படையே எண்கள்தானே? எண்களைக் கண்டுபிடித்த தமிழர்கள் கணக்கியலையும் கண்டுபிடித்ததாகக் கருதுவது நியாயமாக அமையும் என்று கருதுகிறேன்.

## ஆட்சி மொழிகள்

நாகரிகத்தின் தாயாகவும், தலைவியாகவும் கருதப்படுகின்ற சிந்துவெளி நாகரிகத்தில்கூட ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழே பேசப்பட்டது என்ற தகவலை- தமிழே எழுதப்பட்டது என்ற தகவல் ஸ்பெயின் நாட்டுத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஈராஸ் பாதிரியார் அவர்கள் வற்புறுத்தும் உண்மை என்பதை நினைவு கூர விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசியல் அமைப்பு குறிப்பிடும் ஆட்சி மொழிகள் அனைத்திலும் முதலாவதாகப் பிறந்த பெருமை மூத்த மொழியாக இருக்கும் அருமை, மூவேந்தர்களுக்கும் தாய்மொழியாக இருக்கும் சிறப்பு வேறு எந்த இந்திய மொழிகளுக்கும் இல்லை. இந்திய மொழிகளிலே தமிழ்த் தாய்தான் முதல் முதலில் அச்சேறும் பெருமை பெற்றாள் என்ற செய்தியைக் கேட்கிற போது, ஒவ்வொரு தமிழனின் நாடி நரம்புகள் முறுக்கேறுவதைப் பார்க்கலாம். குருதி நாளங்களில் புது வெள்ளம் பாய்வதை உணரலாம்.

## தம்பிரான் வணக்கம்

இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே, போர்ச்சுக்கீசிய நாட்டின் தலைநகரில்தான் முதல் தமிழ் நூல் ஒன்று அச்சிடப்பட்டதாம்.

பின்னர் 25 ஆண்டுகள் கழித்து மேலைக் கடற்கரையின் கொச்சி என்னும் கோ நகரில் 'தம்பிரான் வணக்கம்' என்ற தலைப்பில் இந்திய மண்ணில் முதல் தமிழ்நூல் ஒன்று அச்சிடப்பட்டது. 'தம்பிரான் வணக்கம்' என்ற தலைப்பு தம்பிரானுக்குக் கூறப்பட்ட வணக்கம் மட்டும் அன்று, தமிழுக்கும் கூறப்பட்ட வணக்கம் ஆகும்.

## பெரிய கோயில்

தஞ்சையில் திரண்டிருக்கின்ற தமிழ் அன்பர்களே, உங்களுக்குத் தஞ்சைப் பெருவுடையார் கோவில் பற்றிய செய்தி ஒன்றைச் சொல்லுவேன்.

பெரிய கோவில் கோபுரத்தின் கலசமாக அமைந்திருக்கும், செப்புக் கலசங்களை வெறும் கலசங்களாக மட்டும்தானே காண்கிறீர்கள்? அவை வெறும் கலசங்கள் மட்டும் அல்ல!

காலங்காலமாக பெருவுடையாரின் திருக்கோவிலை, இடி மின்னல் போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து காக்கும் இடி தாங்கியாக அவை செயல்பட்டு வருகின்றன. தமிழர்களின் அறிவியல் அறிவுக்கு இதைவிட சிறந்ததொரு சான்றை என்னால் நினைத்துக்கூட பார்க்கமுடியவில்லை!

தமிழால் முடியும் என்ற கருத்தை ஒப்புக்கொள்ளத் தயங்கும் அன்பர்கள், 20ஆம் நூற்றாண்டு முடிந்து 21ஆம் நூற்றாண்டில் நுழைய இருக்கின்ற இத்தருணத்தில், தமிழால் மட்டுமே முடியும். தமிழால் முடிகின்ற அளவுக்கு வேறு எந்த மொழியாலும் முடியாது என்ற கருத்தை விரைவிலே ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

'தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று கூறி- 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்று முழங்கி- 'செந்தமிழே, நறுந்தேனே, செயலினை மூச்சினை உனக்களித்தேனே' எனச்சொல்லி தஞ்சைக்கும் தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்க்க வந்திருக்கும் உங்களது பாதங்களைத் தொட்டு வணங்கி விடைபெறுகிறேன்.

**எட்டாவது உலகத் தமிழ் மாநாடு மாணவர் அரங்கில் கல்லூரி அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சென்னை எஸ்.ஆர்.எம். உடலியக்கவியல் கல்லூரி மாணவி செல்வி ப. காயத்ரி ஆற்றிய உரையிலிருந்து.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



நீச்சல் அரங்கம்
வேளச்சேரி



டென்னிஸ் விளையாட்டரங்கம்
நுங்கம்பாக்கம்



ஹாக்கி விளையாட்டரங்கம்
எழும்பூர்